முச்சந்தி முரளி



"இஞ்ச இவை
தூதரகத்தைச் சுத்தி
வளைச்சாலும் அவையள்
கதியா கடலுக்க
எல்லாத்தையும் அள்ளத்தான்
போகினம்"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 206

புதன்கிழமை
19 ஜூன் 2024

ஆனி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை



## தீர்ப்புகளுக்கு தெரிவுக்குழு தேவையில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19
உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகள் தொடர்பில் ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்க வேண்டிய

15

# யாழில் தொடர்கின்றன காணாமற்போதல்கள்!

### பின்னணி விசாரிக்கப்படவேண்டும் சிறீதரன் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 19
யாழ். மாவட்டத்தில் வயோதிபர்கள் மிகவும் மர்மமான முறையில் காணாமற்போகும் சம்பவங்களின் பின்னணி தொடர்பில் ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

15

## பெண்களின் உரிமைகளை வெல்வதில் அரசு உறுதி!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19
பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. இதேவேளை, பௌத்த மதத்தின் இருப்புக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு தீர்மானமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

15

## அடிகாயங்களுடன் சடலமொன்று மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 19
கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாற்றுப் பாலத்துக்கு அருகில் அடிகாயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

15

### இந்தியத்துணைத்தூதரகத்தால்

## பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 19
மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தால் பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
நோன்புப் பெருநாளை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் 150 குடும்பங்களுக்கே

15

## மனித உரிமைகள் பேரவை: 56 ஆவது தொடர் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 19
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 56 ஆவது கூட்டத் தொடர், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்க்கர் டர்க் தலைமையில் நேற்று ஆரம்பமானது.

15



## வவுனியாவில் நிலநடுக்கம்?

வவுனியா, ஜூன் 19
வவுனியாவின் பல பகுதிகளில் நேற்று இரவு 11.30 மணியளவில் பெருவெடிப்புச் சத்தமும் இலேசான அதிர்வுகளும் உணரப்பட்டுள்ளன. இது நில நடுக்கமா என்ற அச்சத்தில் மக்கள்

15

## பாம்பு தீண்டி ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 19
பாம்பு தீண்டியதால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தவர் சிகிச்சையின்போது நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.
உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த ஜயாத்துரை செல்வமகிந்தன் (வயது - 47) என்ற நபரே

15

### அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக

## இந்தியத் துணைத்தூதரகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போர்!

யாழ்ப்பாணம், ஜூன் 19
இந்திய இழுவைமடிப் படகுகளின் அத்து மீறல் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு கடற்றொழிலாளர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
யாழ்ப்பாணம் மருதடிச் சந்தியிலிருந்து யாழ். இந்தியத் துணைத்

15

## தமிழ் வாக்குகளுக்காக நாடு பிளவடையுமாம்!

### கம்மன்பில கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 19
வடக்கு தமிழ் வாக்குகளுக்காக நாட்டைப் பிளவுபடுத்தக்கூடிய சட்டங்கள் இயற்றப்படும். இவ்வாறான உறுதிமொழிகளை வழங்கக்கூடிய ஜனாதிபதி வேட்பாளர்கள் தற்போது

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுக்கு நெருக்கமானவர்கள்

# வங்கிகளில் கடன்பெற்று 65,000 கோடி ரூபா மோசடி

### சம்பிக்க வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

**கொழும்பு, ஜூன் 19**

**தற்போது அமைச்சர்களாகப் பதவி வகிப்போர் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளுக்கு நெருக்கமான வர்த்தகர்கள் 10 பேர் இரு அரச வங்கிகளுக்கு 65 ஆயிரம் கோடி ரூபாயை மோசடி செய்து கடன் செலுத்துவதை தவிர்த்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

இதனால் சாதாரண பிரஜை ஒருவருக்கு வங்கிக் கடன் வழங்கமுடியாத நிலைமைக்கு வங்கிகள் தள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ரஞ்சன் சேனாநாயக்கவிடம் கருத்தறிந்துள்ளது. அவர் அந்தச் சம்பவத்தை உறுதிப்படுத்தினார் என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இரு அரச வங்கிகளிடம் 65 ஆயிரம் கோடி ரூபா கடன் பெற்று அதை மீளச் செலுத்தாது செயற்படும் அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளுக்கு நெருக்கமான வர்த்தகர்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அநேக தடவைகள் கேள்வியெழுப்பியிருந்தாலும் அதற்குச் சரியான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை.

அவர்கள் வங்கிகளில் கடன் பெற்று சுமார் 20 வருடங்களாக அவற்றை மீளச் செலுத்தாது வெவ்வேறு வழிமுறைகளில் செயற்பட்டு வருகின்றனர்.

இரு அரச வங்கிகளிலும் காணப்படுவது நாட்டின் சாதாரண மக்கள் வைப்பிலிட்ட பணம் என்பதால், அவற்றை அரசியல்வாதிகள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமான வர்த்தகர்கள் கடனாகப் பெற்றுக் கொண்டு மோசடிகளில் ஈடுபடுவது வங்கிகளால் தாங்கிக்கொள்ள முடியாத ஒரு நிலை என்று அவர் கொழும்பு ஊடகத்துக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார். (எ-இ)

## எனது நலன்களுக்காக கட்சியை விற்கவில்லை

### மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

சிறிலங்கா சுதந்திரக்கட்சியை 170 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்யவில்லை. கட்சி உறுப்பினர்களின் முன்னேற்றத்துக்காகவே கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகினேன் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தலைவர் பதவியை வகிக்கத் தகுதியான வேறு எவரும் இல்லாத காரணத்தினாலேயே, விஜயதாஸ ராஜபக்ச கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, எனக்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற்றுக் கொண்டதன் பின்னணியில், நான், எனது பதவியிலிருந்து விலகவில்லை என்றால், தொகுதி அமைப்பாளர்கள் யாரும்போட்டியிடமுடியாது. எனவேதான் நான், தலைவர் பதவியில் இருந்து விலகினேன். நீதிமன்ற வழக்குகளுக்கு நிதி கிடைக்காததால் 170 மில்லியன் ரூபாவுக்கு கட்சியை விற்றதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. அது உண்மையல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## இறக்குமதிப் பொருள்கள் விலை அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன் 19

எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் சகல பொருள்களினதும் விலை அதிகரிக்கக்கூடும் என அகில இலங்கை சிறு கைத்தொழில்துறை சங்கம் தெரிவித்துள்ளது.

கப்பல் கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட செலவினங்களே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமையவே இறக்குமதி செய்யப்படும் சகல பொருள்களினதும் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளதாக இலங்கை சிறு கைத்தொழில்துறை சங்கத்தின் தலைவர் நிலுக்ஷ குமார தெரிவித்தார். (ச)

## கொரோனா தகன முறை மன்னிப்புக் கோரிய ரணில்

கொழும்பு, ஜூன் 19

கொரோனா தொற்றுக் காலத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் பலவந்தமாகத் தகனம் செய்யப்பட்டமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னிப்புக் கோரியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நடந்த சம்பவங்களுக்கு நாடாளுமன்றம் மன்னிப்புக் கோரவிரும்புகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் இது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழு உடல்களை தகனம் செய்ய வேண்டும் என பரிந்துரைத்தது. உயர்நீதிமன்றமும் அதைஅங்கீகரித்தது. ஆகவே அரசாங்கம் அதைப் பின்பற்றவேண்டிய நிலைமை காணப்பட்டது வேறுவழியிருக்கவில்லை. - என்றார். (எ-இ)

## வலிநிவாரணி விற்பனை ரூபா 2 இலட்சம் தண்டம்


காலி, ஜூன் 19

மருத்துவரின் பரிந்துரையின்றி வலிநிவாரண மாத்திரையை விற்பனை செய்த ஒருவருக்கு இரண்டு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வலி நிவாரண மாத்திரையை பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்த குற்றத்துக்காக அக்மீமன தலகா சந்தியிலமைந்துள்ள மருந்தக உரிமையாளருக்கே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தனது தவறுக்கு மன்னிப்புக் கோரி தேசிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பூசா முகாமிலிருந்து உணவு மருந்துக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய திணைக்களத்தினர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டபோதே குறித்த விற்பனையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் மருந்தகத்தின் அனுமதிப்பத்திரமும் காலாவதியாகி இருந்தமை தெரியவந்துள்ளது. (எ-25.6)



## தேர்தல் திகதியைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கே!

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

தேர்தல்கள் தொடர்பில் அரசமைப்பின் அடிப்படையில் நாங்களே முடிவுகளை எடுக்கவேண்டும். ஏனையவர்கள் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

-இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எல்.ஏ.எம்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசமைப்பின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவே திகதியைத் தீர்மானிக்கும். ஜூலை மாதம் 17ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தீர்மானிப்பதற்கான வலு எமக்குக் கிடைக்கும். செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கு உட்பட்ட எந்தவொரு தினத்திலும் தேர்தலை நடத்த முடியும்.

வார இறுதி நாளிலோ அல்லது வார நாள்களிலோ தேர்தல்கள் இடம்பெறலாம். அதை நாம் தீர்மானிப்போம். அரசியல்வாதிகளுக்கு அது தொடர்பில் அறிவிப்பதற்கு அதிகாரம் இல்லை - என்றார். (எ-இ)

## தேங்காய் வீழ்ந்து குழந்தை சாவு

கொழும்பு, ஜூன் 19

தலையில் தேங்காய் விழுந்ததில் 11 மாதப் பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் கண்டி, கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்தோட்டை நாராங்ஹின்ன பகுதியில் நடந்துள்ளது.

குழந்தையைத் தந்தை தூக்கிச் செல்லும் போதே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## கைபேசியால் விபரீதம்; மாணவன் படுகாயம்

கண்டி, ஜூன் 19

கைபேசியால் நேர்ந்த மோதலில் மாணவர் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் அம்பிட்டிய பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையில் இடம்பெற்றுள்ளது. பாடசாலையில் க.பொ.த. சாதாரண வகுப்பில் கல்விபயிலும் மாணவன் ஒருவன் கைபேசி ஒன்றைப் பாடசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளான். பாடசாலை முடிந்து வீடு திரும்புகையில் சக மாணவன் ஒருவர் அதனை பலவந்தமாகப் பறிக்க முற்பட்டுள்ளார். கைபேசியைக் கொடுக்காததால் பறிக்க முயன்ற மாணவன், கைபேசியை வைத்திருந்த மாணவனை கூரிய ஆயுதத்தால் வயிற்றில் தாக்கியதில் அவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி சுரேஷ்குமார் சந்தேகநபரை கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினார். நீதிபதி சந்தேகநபரின் தாயை கடுமையாக எச்சரித்ததுடன் சந்தேகநபரை ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார். வழக்கு விசாரணை இம்மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (எ-25-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு ஆண்டுகளிலேயே அதிகளவான சட்டங்கள்

## நீதிஅமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 19**

**இலங்கையில் அதிகளவில் சட்டம் தயாரிக்கப்பட்ட ஆண்டுகளாக 2022 முதல் 2024 வரையான காலப்பகுதியே அமைகிறது என்று நீதி, சிறைச்சாலை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் எம். என். ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு முதல் 59 சட்டச் சீர்திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு, 7 சட்டவரைவுகளும் 44 திருத்தச் சட்டங்களும் எதிர்வரும் நாள்களில் நிறைவேற்றப்படவுள்ளன.

2022 ஆம் ஆண்டில் 273 சட்ட வரைவுகளும், 2023 ஆம் ஆண்டில் 299 சட்ட வரைவுகளும் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. நீதித்துறையை செயற்றிறன்மிக்கதாக மாற்றுவதன் மூலம் மக்கள் வழக்குகளை விரைவாக நிறைவுசெய்ய முடியும். வழக்குத் தொடர்பான சொத்துகளை பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம். ஒரு குற்றவியல் வழக்கை முடிக்க பொதுவாக 17 ஆண்டுகள் ஆகும். இந்த நிலையை மாற்றுவதற்குத் தேவையான செயற்பாடுகளைத் திட்டமிட்டுள்ளோம். அதற்கான முக்கியமான தீர்வாக நீதித்துறையை டிஜிற்றல் மயமாக்க வேண்டியுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் பல தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# தனிநபர்களால் நாட்டை முன்னேற்றமுடியாது

## இராஜாங்க அமைச்சர் பஸ்குவெல் தெரிவிப்பு


கொழும்பு, ஜூன் 19

கொள்கைகளின் அடிப்படையிலேயே நாட்டை முன்னேற்ற முடியும். அவ்வாறன்றி தனிநபர்கள் அல்லது கட்சிகளால் அதைச்செய்யமுடியாது என்று சமூகவலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அநூப பஸ்குவெல் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்குத் தேவையான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளார்.

யார் எவ்வாறு அறிக்கைகளை வெளியிட்டாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் வெற்றியடைந்துள்ளன என்பதே உண்மையாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்துக்கு அடித்தளமிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# வாடகை வீட்டு வரி ரணில் விளக்கம்



முதலாவது சொத்துக்கு வருமானம் ஈட்டுவோர் உத்தேச வாடகை வரியில் இருந்து விடுவிக்கப்படுவர் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

சாதாரண வருமானம் ஈட்டுபவர்களுக்கு இந்த வரி விதிக்கப்படமாட்டாது என்றும், அதிக வருமானம் ஈட்டுவோருக்கே இந்த வரி விதிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# தொலைத்தொடர்பு சட்டத்திருத்தம்

## அரசமைப்புக்கு முரண்

கொழும்பு, ஜூன் 19

தொலைத்தொடர்பு திருத்த சட்டவரைவின் சில பிரிவுகள் அரசமைப்புக்கு முரண் என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது என்று சபாநாயகர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

சில சரத்துகள் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டுமென உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# முடிவெடுக்காத முஸ்லிம் காங்கிரஸ்

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிக்கவேண்டும் என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி இன்னும் இறுதியான முடிவை எடுக்கவில்லை என்று அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளோம். அந்த அணியுடன் பயணிக்கவே எதிர்பார்க்கின்றோம். தற்போதைய சூழ்நிலையில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவிலேயே இருக்கின்றோம். எனினும், கட்சி மாற்று முடிவை எடுத்தால் அது பற்றியும் பரிசீலிக்க வேண்டிவரும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# ஐ.எம்.எப். தாளத்துக்கு ஆடுகிறது அரசாங்கம்

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

மக்கள் வறுமையில் வாடினாலும் வரிக்கு மேல் வரி விதிக்கும் அரசின்செயற்பாடுநிற்கவில்லை. சர்வதேச நாணயநிதியம் கூறியதாக தற்போது வாடகை வீட்டுக்கும் வரி விதிக்கும் சூத்திரத்தை அரசாங்கம் உருவாக்கிவருகிறது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாணயநிதியம் சொல்வதை எல்லாம் செய்வதற்கு இந்த அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை வழங்கப்படவில்லை. அரசாங்கம் வினைத்திறன்மிக்கதாக இருந்தால், மக்களுக்காக நல்லதொரு உடன்பாட்டை எட்டுவதற்கான வாய்ப்புகள் இருந்தும் அவ்வாறான எதுவும் நடக்கவில்லை.

சர்வதேச நாணயநிதியத்தின் தாளத்துக்கு ஆடும் பொம்மை ஆட்சியே நாட்டிலுள்ளது. இந்த அரசாங்கம் வரியை மக்களின் தோள்களில் சுமத்தியுள்ளது.


எமது நாட்டுக்குச் சர்வதேச நாணயநிதியத்தின் தலையீடு தேவை. ஆயினும் எமது நாட்டின் இறையாண்மையை நாங்கள் யாருக்கும் விற்கவில்லை. நல்லதொரு கலந்துரையாடலுக்குச் சென்றால் மக்கள் தரப் [illegible] முடியும் - என்றார். (ச-இ)




**ந**ல்லதோர் வீணை செய்தே அதை நாளும் நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? எண்டு பாரதியார் படிச்சது இப்ப கண்ணுக்கு முன்னால நடக்குது. சனத்துக்கு நல்லது செய்த ஆக்களைச் சனங்கள் ஒருக்காலும் மறக்காது. அவை செத்தாலும் அவையை நினைச்சுக்கொண்டு தான் இருப்பினம். அதாலதான் புண்ணியம் செய்தவையின்ர பூதவுடல் அழிஞ்சாலும் புகழுடல் அழியாது எண்டுறவை. அவையின்ர புகழை எப்பவும் நினைவுபடுத்துறமாதிரி சிலையள், தூபியள் கட்டி அதைக் கோயில் மாதிரி நினைச்சு கும்பிடுற வழக்கமும் எங்களிட்ட இருந்தது.

ஆனால் இப்ப என்னெண்டால், விலாசம் காட்டுறதுக்கு மட்டும் உந்தச் சிலையள், தூபியளைக் கட்டத் தொடங்கிட்டம். செத்த ஆக்களின்ர நினைவுநாளோ, பிறந்தநாளோ வரேக்க தான் அவருக்கு இப்பிடியொரு தூபி கட்டினம் எண்ட விசயமே கனபேருக்கு ஞாபகத்துக்கு வருகுது. அதால நினைவுநாளுக்கு முதல்நாள் இல்லாட்டி அண்டைக்கு விடியத்தான் ஆத்துப்பதைச்சுப்போய், விளக்குமாத்தோட வந்து கூட்டுவினம். நிகழ்வு நடக்கிறநேரம் எல்லாரும் பெருமெடுப்பில மாலை மரியாதை எல்லாம் அந்தத் தூபிக்குச் செய்து, அதைப் போட்டோவா எடுத்து மறக்காமல் மீடியாக்களுக்கும் அனுப்பிவைப்பினம். இன்னும் சிலர் சனத்துக்கு இன்னது செய்யப்போறம், இப்பிடி நடக்கப்போறம், அப்பிடி வெட்டி விழுத்தப்போறம் எண்டு உந்தத் தூபியளுக்கு முன்னால சபதமும் எடுக்கிறவை. எல்லாம் கொஞ்சநேரத்துக்குத்தான். குடிகாரன் பேச்சுக்கூட விடியும் வரை தாக்குப்பிடிக்கும். ஆனால் இவையள் அந்த நிகழ்வு முடிஞ்சு வெளிக்கிடேக்கையே தூபியோட சேர்த்து எல்லாத்தையும் மறந்து போடுவினம். பிறகு அடுத்த முறை நினைவுநாளுக்குத்தான் அவைக்கு அந்தத் தூபியும், அங்க கதைச்சதும் நினைவுக்கு வரும். அதுக்குள்ள அந்தத் தூபியோ, சிலையோ இருக்கிற இடம் குப்பைமேடா, பத்தைக்காடா மாறிடும்.

இப்பிடி ஒரு தூபி பட்சியின்ர கண்ணில அம்பிட்டுது. சுதுமலை, தாவடி றோட்டில இருக்கிற முந்தின எம்.பி. தர்மலிங்கத்தாரின்ர தூபிதான் அது. அந்தத் தூபிக்குரிய தர்மலிங்கத்தாரைப் பற்றியோ, அவரின்ர சேவையைப் பற்றியோ, ஊருக்கெல்லாம் தன்ர காணியளை அவர் குடுத்ததைப் பற்றியோ, அவரின்ர காணியிலதான் இப்ப கோப்பாயில கல்வியியல்கல்லூரி இருக்கிறதைப் பற்றியோ சுத்தியுள்ள சனத்துக்குத் தெரியாது போல. அவையள் அந்தத் தூபி உள்ள இடத்தை குப்பையளைக் கொண்டந்து கொட்டுற இடமாப் பாவிக்க வெளிக்கிட்டிருக்கினம். அதைப் பாக்கவே பத்தியெரியுது. எப்பிடிப்பட்ட ஒரு மனிசனுக்கு, இப்பிடிப்பட்ட வேலையைச் சனம் செய்யுதே எண்டு அந்தரமாக் கிடந்தது. அந்த இடத்தை சனங்கள் சுத்தம் செய்யாட்டியும் பரவாயில்லை, இப்பிடி ஒரு குப்பை கொட்டுற இடமாப் பாவிக்காமல் இருந்தாலே தர்மலிங்கத்தாருக்கு பெரிய மரியாதை குடுத்தமாதிரி இருக்கும். இந்தத் தூபி இருக்கிற இடத்துக்குரிய பிரதேசசபைக்காரரோ, இல்லாட்டி அவரின்ர மகன் சித்தரோ கொஞ்சமெண்டாலும் இதைக் கவனமெடுத்தால், சனம் தர்மலிங்கத்தாரின்ர தூபியடியில குப்பை போடுறதைத் தடுக்கலாமெல்லோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வாக்கு வாதம் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். உதவி கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். இலாபம் அதிகரிக்கும். தடைகள் விலகும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. தந்தை வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரத்தில் போட்டியாளர்களின் தொல்லைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**துலாம்:** காரியம் சாதகமாக முடியும். சங்கடங்கள் நீங்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவுகளில் திட்டமிடுதல் அவசியம். விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். அம்பிகையை வழிபடுவதன் மூலம் மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நல்ல தகவல் கிடைக்கும். செலவு செய்வீர்கள். வீண் பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். அனுசரித்துச் செல்லவும். பிணக்குகள் நீங்கும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரம் செலவுகளும் அதிகரிக்கும். காரியம் முடிவது இழுபறியாகும். பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. நல்ல திருப்பம் ஏற்படக்கூடும். அம்பிகையை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**கும்பம்:** சிலருக்குக் குடும்ப விடயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மறைமுகத் தொல்லைகள் ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராகத் தான் இருக்கும். அலைச்சல் உண்டாகும்.



# ஆப்கான் பந்துவீச்சை துவைத்தது மேற்கிந்தியா

## 104 ஓட்டங்களால் அமோக வெற்றி

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 40 ஆவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆப்கானிஸ்தான் அணியை 104 ஓட்டங்களால் வீழ்த்தியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 218 ஓட்டங்களைக் குவித்தது. இந்த மொத்த எண்ணிக்கையானது இந்த வருட ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் பெறப்பட்ட அதிகூடிய மொத்த எண்ணிக்கையாகும். அணியின் ஓட்ட எண்ணிக்கை 22 ஓட்டங்களாக இருந்தபோது ஆரம்ப வீரர் ப்ரெண்டன் கிங் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் நிக்கலஸ் பூரன், ஜோன்சன் சார்ள்ஸ் ஆகிய இருவரும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக உயர்த்தினர்.

2ஆவது விக்கெட்டில் ஜோன்ஸன் சார்ள்ஸுடன் 37 பந்துகளில் 80 ஓட்டங்களைப் பகிர்ந்த நிக்கலஸ் பூரன் 4ஆவது விக்கெட்டில் ரோவ்மன் பவலுடன் மேலும் 64 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியின் மொத்த எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்தார். மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடிய நிக்கலஸ் பூரன் 98 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார். நடப்பு ரி-20 உலகக் கிண்ணப் போட்டியில் தனி நபருக்கான அதிகூடிய ஓட்டங்களை நிக்கலஸ் பூரன் பெற்றதுடன் ஒரு போட்டியில் அதிக சிக்ஸர்களை (8) விளாசிய சாதனையையும் நிலைநாட்டினார்.

219 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆப்கான் அணி 16.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியைத் தழுவியது. இது நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கான் அடைந்த முதலாவது தோல்வியாகும். (எ)

# வாராந்த சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 19

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 8 பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.


"மாணிக்கவாசகரும் திருவம்மானையும்" எனும் விடயப்பொருளில் இளஞ்சைவப்புலவர் வாரிதி ச. நவநீதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (எ-25)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்.மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 15 ஆம் ஆண்டு பொதுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

நிதியத்தின் தலைவர் அ. அருந்தவநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பதில் செயலர் ம.பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக நிதியத்தின் கொழும்பு தாய்ச் சங்கத்தின் உப தலைவர் சோ.சுப்பிரமணியம், மாவட்ட செயலகத்தின் கணக்காளர், ஓய்வூதிய அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். யாழ்.மாவட்டத்தின் 15 பிரிவுச் சங்கங்களிலும் உள்ள மூத்த சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. (எ-25)





சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு யாழ்.நீரிழிவுக் கழகமும் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பிரிவினரும் இணைந்து நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் கல்லூரியில் யோகா விழிப்பூட்டல் செயலமர்வை நடத்தின. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேச நாணயநிதியத்தின் நிதியுதவி நாட்டு மக்களுக்கே

## முன்னாள் சபாநாயகர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 19

சர்வதேச நாணயநிதியம் வழங்கும் ஒவ்வொரு சதத்தையும் பக்குவமாக செலவழிக்கவேண்டும். நாணயநிதியத்தின் அடுத்த கட்டக் கொடுப்பனவு நாட்டு நலனுக்கே செலவிடப்பட வேண்டும். நாட்டு நலனுக்கு இந்தப் பணத்தைச் செலவிடவேண்டியது எமது கடமை என முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார். இப்போது நாங்கள் முன்னிலைப்படுத்தவேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன. ஊழலை ஒழித்தல், வெளிப்படைத்தன்மை இந்த இரண்டு விடயங்களையும் தான் சர்வதேச நாணயநிதியம் வலியுறுத்துகிறது.

அடுத்த விடயம் நாட்டிலுள்ள 15 ஆயிரம் குளங்களும் புனரமைக்கப்பட வேண்டும். இராணுவம் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் இதனைச் செய்யலாம். ஏற்றுமதித் துறை அபிவிருத்திச்சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். பாரம்பரிய ஏற்றுமதியாளர்களுக்கு நவீன தொடர்பாடல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

அத்துடன் பாரம்பரிய உற்பத்திகளின் கண்காட்சிகளும் ஒழுங்குபடுத்தப் படவேண்டும்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்குக் குறைந்த வட்டியில் உபகரண, இயந்திர வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-25-6)

## விளம்பரம் செய்து மோசடி இராணுவ அதிகாரி கைது

கொழும்பு, ஜூன் 19

மணமகள் தேவை என பத்திரிகைகளில் விளம்பரம் செய்து பல பெண்களை ஏமாற்றி மோசடி செய்த முன்னாள் இராணுவ அதிகாரியொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த அதிகாரியின் விளம்பரங்களில் சிக்கியதாக 10 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த மோசடியூடாக அவர் இலட்சக் கணக்கான பணம் மோசடி செய்துள்ளார் என்றும் பெண்ணொருவரிடமிருந்து இரண்டு இலட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## யோகா தின நிகழ்வு

மன்னார், ஜூன் 19

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரி மைதானத்தில், யோகா தின நிகழ்வுகள் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி, தூதரக உயரதிகாரி நாகராஜன், மன்னார் மாவட்டச் செயலாளர் கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-213)

## மக்களாணையைக் காக்க சகலரும் ஒன்றிணைவோம்

### சர்வஜன சக்தி அழைப்பு

கொழும்பு, ஜூன் 19

ராஜபக்சக்கள் மீதான நம்பிக்கையை ராஜபக்சக்களே இல்லாதொழித்துக் கொண்டார்கள். இந்த 69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எமக்குண்டு. அதனைப் பலப்படுத்த அனைவரும் ஒன்றிணைவோம்.

- இவ்வாறு சர்வஜன சக்தியின் பிரதிநிதிகளான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, திலித் ஜயவீர, சன்ன ஜயசுமன கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அநுராதா யஹம்பத் ஆகியோர் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர்.

2019ஆம் ஆண்டு பெரும்பான்மையின மக்களின் எதிர்பார்ப்புக்கு மத்தியில் கோத்தாபய ராஜபக்ச ஆட்சியமைத்தார். ஆயினும் அவர் மக்களாணைக்கும், அபிலாஷைகளுக்கும் முரணாகச் செயற்படும்போது மக்கள் போராட்டம் தீவிரமடைந்தது. இப்போது ராஜபக்சக்கள் தலைமையிலான பொதுஜன பெரமுன மீதும் நம்பிக்கை கொள்ளமுடியாது.

69 இலட்சம் மக்களாணையைப் பாதுகாக்கும் வகையில் மக்கள் அலையை மீண்டும் ஒன்றிணைக்கவுள்ளோம். மக்களாணையைப்பாதுகாக்கவேண்டியது எமது பொறுப்பு. அரசியல் கொள்கை வேறுபாடுகளைப் புறக்கணித்து நாட்டுக்காக ஒன்றிணைவோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## சபை நிதி 2024 (கட்டம் I மீள்கேள்வி)
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் **கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.06.19 – 2024.07.01 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து** ரூ. 3,500.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம். பிரதி) 2024.07.02ந் திகதி 10.30 மணிக்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
8. விலைக்கேள்விகள். அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
9. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 kணிக்கு 2024.06.25 அன்று நடைபெறும்

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்விஇலக்க இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/02 /05/CF/2024/01 | தொகுதி A<br>1. அண்ணா பண்ணைக்கு அருகாமையில் (புதிய வீதி) வீதி புனரமைப்பு<br>2. சங்குவேலி தெற்கு காளிகோவில் முன்வீதி (உப ஒழுங்கை) | 3.11 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 32,000.00 | 30.09.2024 வரை |
| 02. | NP/14/41(15)/02 /05/CF/2024/02 | தொகுதி B<br>1. சிவபூதராயர் குறுக்கு வீதி<br>2. சபாபதிப்பிள்ளை வீதி (வைரவர் கோவில் வீதி கிளை ஒழுங்கைகள்) புனரமைத்தல் | 2.60 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 26,000.00 | 30.09.2024 வரை |
| 03. | NP/14/41(15)/02 /05/CF/2024/03 | மகளிர் கல்லூரி கிழக்கு வீதி புனரமைப்பு – உடுவில் | 2.63 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 27,000.00 | 30.09.2024 வரை |
| 04. | NP/14/41(15)/02 /05/CF/2024/04 | ஜனசக்தி சனசமூகநிலைய வீதி புனரமைத்தல் | 2.24 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 23,000.00 | 30.09.2024 வரை |
| 05. | NP/14/41(15)/02 /05/CF/2024/05 | அம்பலவாணர் வீதி புனரமைத்தல் | 3.39 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 34,000.00 | 30.09.2024 வரை |
| 06. | NP/14/41(15)/02 /05/CF/2024/07 | தொகுதி C<br>1. உழவர் வீதியிலுள்ள 1ம் 2ம் குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு<br>2. வன்னியசிங்கம் வீதியின் கிளைவீதி புனரமைப்பு | 3.10 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 31,000.00 | 30.09.2024 வரை |
| 07. | NP/14/41(15)/02 /05/CF/2024/08 | தொகுதி D<br>1. உயிலடி 4ஆம் குறுக்கு வீதி<br>2. சுன்னாகம் புத்தூர் வீதி புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பக்கம் 3ஆம் குறுக்கு வீதி 3ஆம் சந்தி அருகாமை சாந்தை வீதி<br>3. சிறிமுருகன் பாடசாலை அருகாமை வீதி | 2.61 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 27,000.00 | 30.09.2024 வரை |
| 08. | NP/14/41(15)/02 /05/CF/2024/09 | மயிலங்காடு மல்லாகம் முதலாம் குறுக்கு வீதி | 2.69 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 27,000.00 | 30.09.2024 வரை |
| 09. | NP/14/41(15)/02 /05/CF/2024/10 | தொகுதி E<br>1. உருளைக்கடவை வீதி (சுன்னாகம் புத்தூர் வீதி புன்னாலைக்கட்டுவன் முதலாம் குறுக்கு வீதியின் தெற்குப் பக்கம்)<br>2. மில் வீதியின் உப வீதி புனரமைப்பு | 2.61 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 27,000.00 | 30.09.2024 வரை |
| 10. | NP/14/41(15)/02 /05/CF/2024/11 | தொகுதி F<br>1. ஏழாலை மத்தி காளிகோயில் வீதி உப ஒழுங்கை<br>2. ஞானப்பிரகாசர் அளவாவோடை 5வது, 6வது குறுக்கு வீதி (கேசாவத்தை வீதி) | 2.52 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 26,000.00 | 30.09.2024 வரை |
| 11. | NP/14/41(15)/02 /05/CF/2024/12 | தொகுதி G<br>1. சுன்னாகம் புத்தூர் வீதி மெதடிஸ் ஆலயத்திற்கு மேற்குப் பக்கமாகவுள்ள வீதி<br>2. இசிதோர் வீதியின் கிளை வீதி | 2.53 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 26,000.00 | 30.09.2024 வரை |
| 12. | NP/14/41(15)/02 /05/CF/2024/13 | தொகுதி H<br>1. சபாபதி வீதி - ரான்ஸ்போமர் வீதி இணைப்பு வீதி<br>2. கருணாகரபிள்ளையார் கோயில் வீதி மிகுதிவேலை | 4.32 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 02.09.2024 | 44,000.00 | 30.09.2024 வரை |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii)

தலைவர்
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,
வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
19.06.2024

(Cr.42675) (N-1)


# சமஷ்டியை கொண்டுவர நடவடிக்கை எடுங்கள்!

## கஜேந்திரன் எம்.பி.வலியுறுத்து

கொழும்பு, ஜுன் 19


ஒற்றையாட்சி முறைமையை ஒழித்து விட்டு தமிழ்த் தேசமும், சிங்கள தேசமும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசமைப்பை கொண்டுவருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு ஜனாதிபதி முயற்சித்துவருகின்றார். இந்த நாட்டை பொருளாதார அழிவில் இருந்து மீட்டெடுப்பதற்கு செய்யவேண்டிய பிரதான கடமையொன்று உள்ளது என்பதை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். 75 வருடங்களாக இனங்களுக்கிடையில் இருந்த உறவை சீர்குலைத்து, துருவமயப்படுத்தி இருக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பு நீக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்குக் கொண்டுவந்துள்ள, உச்ச நீதிமன்றம் உட்பட சகல நீதிமன்றங்களையும் முடமாக்கி இருக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பு ஒழிக்கப்பட்டு, தமிழ்த் தேசமும், சிங்கள தேசமும் இந்த நாட்டின் முன்னேற்றத்தில் சமத்துவமாக பங்கெடுக்கக்கூடிய வகையில் சமஷ்டி அரசமைப்பு கொண்டுவரப்படவேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாகமட்டுமே நிரந்தர முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

**ஒற்றையாட்சி முறைமையில் உள்ள தோல்விகளை ஒப்புக்கொண்டு ஜனாதிபதி தன்னுடைய பதவிக் காலத்தில் ஒற்றையாட்சி முறைமையை ஒழித்து, தமிழ்த் தேசமும், சிங்கள தேசமும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசமைப்பைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதனைச் செய்வதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கின்றாரா?" - என்றார்.** (ம-44-26)



செல்வச் சந்நிதியானின் வருடாந்த ஆனிப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு, உப்புத்தீர்த்தம் எடுத்து விளக்கேற்றும் வழிபாடுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. எதிர்வரும் 24ஆம் திகதி ஆனிப்பொங்கல் உற்சவம் இடம் பெறவுள்ளது. (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காகிதத்தை விட்டு களத்தில் இறங்குக!

செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நாடு எதிர்பார்த்திருக்கும் நிலையில் தேர்தல் களம் சூடுபிடித்திருக்கின்றது. தெற்கின் பிரதான கட்சிகள் தேர்தலுக்கான நகர்வுகளில் முழுவீச்சில் இறங்கியிருக்கின்றன. தேர்தல் கூட்டணி, கட்சிதாவல்கள், பேரம்பேசல்கள் என கொழும்பு அரசியல் பரபரப்பாக இருக்கின்றது. அரசமைப்புக்கு அமைவாக தேர்தல்கள் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது. அறிவிப்புடன்நின்றுவிடாது தேர்தலுக்கான முன்னாயத்த நடவடிக்கைகளில் தேர்தல்கள் ஆணைக்குழு இறங்கியிருக்கின்றது. அரசமைப்பில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்தை ஓராண்டு நீடிக்கலாம் என்ற ஊகங்கள் வெளிவந்தாலும், அதற்கான சாத்தியங்கள் குறைவு என்கின்றனர் சட்ட நிபுணர்கள். ஆக இந்த ஆண்டு நாடு ஒரு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளும் என்பது ஏறத்தாழ உறுதியாகியிருக்கின்றது.

வடக்கில் இம்முறை பொதுவேட்பாளர் என்ற விடயம் பேசுபொருளாகியிருக்கின்றது. தமிழ் மக்களின் வேணவாக்களை உலகறியச் செய்ய ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்திருக்கின்றது. இதுவரை காலமும் தமிழ்மக்களை ஏமாற்றிவந்த தெற்கின் முகத்தில் கரிபூசவும், தமிழ்மக்களின் வேணவாக்களை, ஒற்றுமையை உலகறியச்செய்யவும் பொதுவேட்பாளர் என்ற நகர்வின் ஊடாக சாத்தியமாக்கமுடியும். ஆனால் அந்த விடயத்தைக் கச்சிதமாகமுடிக்காவிட்டால், பூமராங்காக மாறிச் சுழன்றடிக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

தேர்தலுக்கான காலம் நெருங்கிவரும் நிலையில் வடக்கின் அரசியல் நிலைமை தெற்குக்கு நேர்மாறாகவே இருக்கின்றது. தேர்தல்கள் தொடர்பான எந்தப் பிரக்ஞையும் இன்றி இருக்கின்றனர் வடக்கு மக்கள். பொதுவேட்பாளர் என்ற மிகப்பெரும் நகர்வை முன்னெடுப்பதற்கு, கூட்டங்கள் தவிர்ந்த எந்த அறிகுறிகளும் தமிழர் பகுதிகளில் இதுவரை காணமுடியவில்லை. பொதுவேட்பாளர் என்ற தீர்மானத்தின் பின்னால் ஒட்டுமொத்த தமிழ்மக்களையும் திரளவைக்க வடக்கு, கிழக்கில் இப்போதுள்ள சோம்பேறித்தனமான - அறிக்கை அரசியலால் முடியாது. அதற்கு களத்தில் இறங்கி மக்களைத் தெளிவுபடுத்தி திரளச்செய்வது அவசியம். இது ஓர் இலகுவான - சாதாரண விடயமும் அல்ல அதற்குக் காலமும் தேவை.

தெற்கில் உள்ள கட்சிகள் வடக்கு வாக்குகளைக் குறிவைத்து தலையால் கிடங்கு கிண்ட ஆரம்பித்திருக்கின்றன. நாட்டின் ஜனாதிபதி, எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் என வரிசைகட்டி வந்து வாக்குறுதிகளை அள்ளிவீசுகின்றனர். இனியும் காலம்தாழ்த்தாமல் 'தமிழ்ப் பொதுவேட்பாளர்' விடயத்தைக் கையிலெடுத்துள்ள தரப்புகள் தீர்மானங்களை எடுக்கவேண்டும். வழமையான சோம்பேறித்தனமான அரசியலைவிட்டு, களத்தில் இறங்கிச் செயற்பட முன்வரவேண்டும். இல்லாவிட்டால் வடக்கு வாக்குகளை தெற்கு அறுவடைசெய்யும் அவலமான வழக்கமான நிலைமையே தொடரும்.



## 5 மாதங்களில் அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் ரூ. 3,380 பில்.



**கொழும்பு, ஜூன் 19**

**அரசாங்கம் இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் மே 31ஆம் திகதி வரையில் சுமார் 3 ஆயிரத்து 380 பில்லியன் ரூபாவை உள்நாட்டுச் சந்தையில் கடனாகப் பெற்றுள்ளது.**

மத்தியவங்கியின் பகுப்பாய்வு அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார். 5 மாதங்களில் சுமார் 3 ஆயிரத்து 85 பில்லியன் ரூபா திறைசேரி உண்டியல்கள் மூலமாகவும் 785 பில்லியன் ரூபாவை திறைசேரி பத்திரங்கள் மூலமாகவும் அரசு கடனாகப் பெற்றுள்ளது.

சராசரியாக ஒரு மாதத்தில் பெறப்பட்ட உள்நாட்டுகடன் தொகை 775 பில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும், ஒருநாளில் எடுக்கப்பட்ட சராசரி கடன் தொகை சுமார் 25 பில்லியன் ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

## சிறுவர்களிடையே வைரஸ் காய்ச்சல்

கொழும்பு, ஜூன் 19

சிறுவர்களிடையே பரவிவரும் வைரஸ் காய்ச்சல் தொடர்பில் பெற்றோர் அவதானமாகச் செயற்படவேண்டும் என்று சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பெரியவர்கள் புகைப்பிடிக்கும் பழக்கமுள்ள வீடுகளில் குழந்தைகளுக்கு ஆஸ்துமா மற்றும் சுவாசக் கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமுண்டு.

அத்துடன் நிலவும் மழை மற்றும் காலநிலை காரணமாக சளி அதிகரித்து இருமல், சளி, வைரஸ் காய்ச்சல் மற்றும் ஏனைய தொற்றுக் காய்ச்சல்களும் அதிகரித்து வருகின்றன என்றும் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். (ச-இ)

## பிறப்பு வீதம் சரிவு

கொழும்பு, ஜூன் 19

இலங்கையில் கடந்த 5 வருடங்களில் பிறப்பு எண்ணிக்கை குறைவடைந்துள்ளமை ஆய்வில் தெரியவந்துள்ளதாக மகளிர் மற்றும் மகப்பேறியல் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரித்துள்ளது.

2017 ஆம் ஆண்டு இந்த நாட்டில் பிறந்தவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 25 ஆயிரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டு 2 இலட்சத்து 47 ஆயிரமாகக் குறைவடைந்துள்ளது.

இந்த நிலைமையானது, எதிர்காலத்தில் நாட்டின் தொழிலாளர் பற்றாக்குறையை உருவாக்கும் என்றும் அதன் காரணமாக பொருளாதாரம் பாதிக்கப்படக்கூடும் என்றும் மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

## குறைவடையும் வனப்பரப்பளவு

கொழும்பு, ஜூன் 19

நாட்டின் வனப்பரப்பு 29 சதவீதமாகக் குறைந்துள்ளது என்று வனவளப் பாதுகாப்புத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிஷாந்த எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

காட்டுத்தீ, வனப்பிரதேசங்களுக்குள் அத்துமீறிய மனிதச் செயற்பாடுகள் போன்ற காரணங்களால் வனப்பரப்பளவு குறைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

## தந்தையைத் தாக்கிய மகளுக்கு மறியல்

மாத்தளை, நாவுல பிரதேசத்தில் 70 வயது தந்தையைத் தாக்கிய குற்றச்சாட்டில் 29 வயதுடைய மகள் கைதுசெய்யப்பட்டுள்ளார் என நாவுல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததையடுத்து சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-இ)

### நாளை

20.06.2024

**வியாழக்கிழமை**

**ஆனி - 06**

சுபநேரம் : 07.24 - 08.54

ராகுகாலம் : 01.24 - 02.54

### நாளொரு நல்வார்த்தை

**மிகச் சிறந்த அல்லது மிக மோசமான விடயங்களே விலை போகின்றன.**

**- ஷோபா டே-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு ஆனதம்மா

மலர்வு 23 . 01 . 1971



உதிர்வு 19 . 06 . 2022

## ஐங்கரன் சாந்தமலர்

ஈராண்டுகள் ஆனதம்மா ! என்னவளே !
ஆனாலும் விழிகளில் நீர் குறைவின்றி வருகின்றது
எமக்கான அனைத்தையும் குறைவின்றிச் செய்து
எமை தவிக்க விட்டு சென்ற மாயம்தான்
என்னவோ என் துணையவளே ??? அம்மா ???
காலனது பிடியிலிருந்து விலகி திரும்பி
வரமாட்டீர்களா என்று தினமும் ஏங்கித் தவிக்கின்றோம்.

**ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்**


**கோண்டாவில், இணுவில்**

**கணவர், பிள்ளைகள்**

(CS/775) J-1

# மரண அறிவித்தல்

மலர்வு 12 . 11 . 1944



உதிர்வு 14 . 06 . 2024

## பஸ்ரியாம்பிள்ளை பொனவெஞ்சர்

(ஓய்வுநிலை ஆசிரியர் -
கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரி - கொழும்பு - 4 )

யாழ். குருநகரைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பு மற்றும் நியூஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்ரியாம்பிள்ளை பொனவெஞ்சர் கடந்த 14.06.2024 வெள்ளிக்கிழமை நியூஸ்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கஸ்பார் தம்பதியரின் பாசமிகு மூத்தமகனும். காலஞ்சென்ற பீற்றர் தம்பதியரின் அன்பு மருமகனும். பிறிம்றோஸ் அவர்களின் அன்புக் கணவரும். மரியநிலா (சுகி. சுகன்யா) வின் பாசமிகு தந்தையும். சூசைப்பிள்ளை டைசனின் பாசமிகு மாமனாரும். காலஞ்சென்றவர்களான குளோற் றில்டா சில்வேஸ்ரர் (ராணி - பிரான்ஸ்). டொன் பொஸ்கோ. கில்பேட் மற்றும் பிளசி அருமைநாயகம் (லண்டன்). செசாறியுஸ் (பெப்பி - பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும். காலஞ்சென்றவர்களான பற்றிக் பீற்றர். ஜோசப்பின் ராஜநாயகம் (பேபி). சிசிலியா பத்திநாதர் (மணி). கிறிஸ்ரீன் தர்மசீலன் (நீர்கொழும்பு) மற்றும் கிளாரன்ஸ் பீற்றர் (ஜெயம் - அவுஸ்ரேலியா). தேவதாஸ் பீற்றர் தேவா (நீர்கொழும்பு). றெஜீனா பீலிக்ஸ் (மலேசியா). மனவல் சில்வேஸ்ர் (பிரான்ஸ்). அன்ரனி அருமைநாயகம் (லண்டன்). மேர்சி டொன்பொஸ்கோ (பாஷையூர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும். ஜான்சன் - ஜெனோவா (ஜூன்) (பிரான்ஸ்). அருண் - நிலானி. பேட்டின் - அனுசியா. பெனோவா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும். மிதுலன். ராகுலன். பவித்தா (பாஷையூர்) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஸ்ரெவானி. ஜெனி. பிரவீன். நொய்லின்மேரி. பிறின்ஸ்டன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நியூஸ்லாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**அன்ரனி அருமைநாயகம் (மைத்துனர்)**

| | |
|---|---|
| **பிறிம்றோஸ் (மனைவி - நியூஸ்லாந்து)** | - 642 265 49651 |
| **சுகன்யா (சுகி) மகள்** | - 642 236 14269 |
| **டைசன் (மருமகன்)** | - 642 143 1224 |
| **அருமைநாயகம் பிளசி (சகோதரி - லண்டன்)** | - 444 843 538122 |
| **பெப்பி (சகோதரன் - பிரான்ஸ்)** | - 336 955 12412 |

(cs.55421) N-1

# பொலிஸில் பவுஸர் தாகத்தில் மக்கள்

விபத்தொன்றை அடுத்து காரைநகர் பிரதேசசபையின் தண்ணீர் பவுஸர் பொலிஸ் நிலையத்தில் தரித்து நிற்பதால் காரைநகர் பிரதேச மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழிலிருந்து வட்டுக்கோட்டை நோக்கிப் பயணித்த காரைநகர் பிரதேசசபையின் தண்ணீர் பவுஸர் வாகனமும் வட்டுக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியும் கல்லுண்டாய் வெளிப்பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு விபத்துக்குள்ளாகியிருந்தன. முச்சக்கரவண்டியின் சாரதி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தண்ணீர் பவுஸரின் சாரதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சுமார் 5 தினங்களுக்கு மேலாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தண்ணீர் பவுஸர் நிறுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் குடிதண்ணீர் இன்றி பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-25-125)

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- திருநாவுக்கரசு குமணன் பெண் சிந்துஜா |
| விண்ணப்பதாரர் பெயர் | :- திரு. திருநாவுக்கரசு குமணன் |
| முகவரி | :- 127/12. கோவில் வீதி யாழ்ப்பாணம் |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 12. மகாத்மா வீதியில் ஆதன இல. 64 இல் அமைந்துள்ள அளவெட்டி கோவிற்பற்று அளவெட்டி இறையில் அமைந்துள்ள "நாவலடியும் மறுபிரிவுகளும் அன்னதேவன் தோட்டமும் அன்னதேவன் வளவும்" என்ற ஆதனம் E. பொன்னுத்துரை என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது. குறித்த ஆதனமானது 16.09.2018 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிஸ் பா.சுப்பிரமணியம் அவர்கள் முகதாவில் இலக்கம் 11555 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நாவலடியும் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு 51/2 விஸ்தீரணம் கொண்ட ஆதனமும் அன்னதேவன் தோட்டமும் அன்னதேவன் வளவும் என்ற நிலப்பரப்பு 05 விஸ்தீரணமுள்ள ஆதனமும் சேர்ந்து நிலப்பரப்பு 10 குளி 2.56 விஸ்தீரணம் கொண்ட ஆதனம் விண்ணப்பதாரர்கள் திருநாவுக்கரசு குமணனும் பெண் சிந்துஜாவும் பிரசித்த நொத்தாரிசு பா. சுப்பிரமணியம் முகதாவில் 16.09.2018ம் திகதியில் 11555ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் பொன்னையா சிவபாலன் மற்றும் தங்கேஸ்வரன் பெண் சிவனேஸ்வரி ஆகியோரிடமிருந்து கொள்வனவு செய்துள்ளனர். மேற்குறித்த 11555ம் இலக்க யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் G116/09 இலக்க காணிப் பதிவுப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இருமடித்தாளின் பிரதி இவ்விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 11555ம் இலக்க உறுதிக்கான தாயுறுதிகளாக பிரசித்த நொத்தாரிசு சீ.பொ. சிவஞானம் முகதாவில் 2013.12.26ம் திகதியில் 2104ம் இலக்கத்திலும் 2012.06.14ம் திகதியில் 1883ம் இலக்கத்திலும் நிறைவேறிய உறுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த 2104ம். 1883ம் இலக்க உறுதிகள் மூலம் விண்ணப்பதாரருக்கு விற்பனை செய்த பொன்னையா சிவபாலனுக்கும் ஐயாத்துரை தங்கேஸ்வரன் கைம்பெண் சிவனேஸ்வரிக்கும் குறித்த ஆதனங்கள் வந்தடைந்துள்ளன. 2104ம் இலக்க உறுதி யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் G21/109 இலக்க காணிப் பதிவுப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இருமடித்தாளின் பிரதி இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் G21/109 இலக்க காணிப்பதிவுப் புத்தக இருமடித்தாளில் நாவலடியும் மறுபிரிவுகளும் என்ற ஆதனத்தின் விஸ்தீரணம் நிலப்பரப்பு 51/2 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1883ம் இலக்க உறுதி யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் H862/10 இலக்க காணிப் பதிவுப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இருமடித்தாளின் பிரதியும் விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த H862/10 இலக்க காணிப்பதிவுப் புத்தக இருமடித்தாளில் அன்னதேவன் தோட்டமும் அன்னதேவன் வளவும் என்ற ஆதனத்தின் விஸ்தீரணம் நிலப்பரப்பு 5 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2104ம் இலக்க உறுதிக்கான தாயுறுதியாக பிரசித்த நொத்தாரிசு த. சபாபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 1924.01.27ம் திகதிய 1775ம் இலக்க உறுதி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவ்வுறுதி மூலம் நாவலடியும் மறுபிரிவுகளும் என்ற ஆதனம் விற்பனையாளர் பொன்னையா சிவபாலனின் மாதாவை வந்தடைந்து மாதாவழி உரிமையாக அவரை வந்தடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் குறித்த 1775ம் இலக்க உறுதியின் பிரதி விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் குறித்த உறுதியின் பிரதி காணிப்பதிவகத்தில் தொலைந்துவிட்டதெனக் குறிப்பிட்டு காணிப் பதிவகத்தால் வழங்கப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் 1883ம் இலக்க உறுதிக்கான தாயுறுதியாக பிரசித்த நொத்தாரிசு இ.ந. சிவப்பிரகாசம் முகதாவில் நிறைவேறிய 1962.10.22ம் திகதிய 3016ம் இலக்க உறுதி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவ்வுறுதி மூலம் அன்னதேவன் தோட்டமும் அன்னதேவன் வளவும் என்ற ஆதனத்தின் ஒரு பகுதி விற்பனையாளர் ஐயாத்துரை தங்கேஸ்வரன் கைம்பெண் சிவனேஸ்வரிக்கு ஆதனத்தை நன்கொடை வழங்கியவர்களின் பெற்றோரை வந்தடைந்தது எனவும் மறுபகுதி மூதாதையர் மூலம் வந்தடைந்த உரிமைப் பங்குகள் மூலம் வந்தடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த 3016ம் இலக்க உறுதியின் பிரதியினை விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ளார்.

### ஆதன விபரம்

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்குப் பகுதி. வலிகாமம் வடக்கு பிரதேசசபை வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவு "அளவெட்டி கோயிற்பற்று அளவெட்டி இறை J/216 அளவெட்டி மத்தி கிராம சேவகர் பிரிவு நாவலடியும் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு 51/2 (பதிவு யாழ் G 21/109) இதுவும் அன்னதேவன் தோட்டமும் அன்னதேவன் வளவும்" நிலப்பரப்பு 5 (பதிவு யாழ் H862/10) இதுவும் சேர்ந்தொன்றான காணிக்கு நிலப்பரப்பு 101/2 இதற்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் கிருஸ்ணர் ஆறுமுகம் அவர்களால் 4506ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட நிலஅளவைப்படத்தின் படி நிலப்பரப்பு 10 குளி 02.56 இதற்கு எல்லைகள்

கிழக்கு :- கோபாலகிருஸ்ணன் கமலாதேவிக்குரிய ஆதனமும் விஜயநாயகம் கண்மணிக்குரிய ஆதனமும் தம்பு அருமைத்துரைக்குரிய ஆதனமும் முத்தையா தயாபரனுக்குரிய ஆதனமும்.
வடக்கு :- நன்னித்தம்பி மனோன்மணிக்குரிய ஆதனமும்.
மேற்கு :- கயிலைநாதன் சொர்ணமாலாவுக்குரிய ஆதனமும் மற்றும் விநாயகமூர்த்தி மாலினிக்குரிய ஆதனமும்.
தெற்கு :- றோட்டும். செல்வேந்திரா தயாபரனுக்குரிய ஆதனமும்.

மேற்குறித்த ஆதனத்தை திருநாவுக்கரசு குமணன் பெண் சிந்துஜா என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் திருநாவுக்கரசு குமணன் பெண் சிந்துஜா எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(CS/55380) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தோடு
தனக்குள்ள உறவை
மனிதன்
உணராவிட்டால்
அவன் வாழுமிடம்
சிறைக்கூடமாகும்

- தாகூர்

19.06.2024
புதன்கிழமை

# புதன் பொய்கை

# இன்றைய ஆட்சியாளர்களுக்கு வழிகாட்டும் திருக்குறள்

இரா.ஜெயக்குமார்



அரசன் முதலில் தனது குற்றங்களைக் கண்டு அவற்றை நீக்கவேண்டும். அதன் பின்னரே மற்றவர்களின் குற்றங்களைக் காணவேண்டும். ஏனெனில், அரசனின் வழியையே குடி மக்களும் பின்பற்றுவர். இக்கருத்தினைத் திருவள்ளுவர் 'தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற் பின் என் குற்றமாகும் இறைக்கு' என்ற குறள் மூலம் வலியுறுத்துகிறார்.

அரசன் வரவு, செலவுத் திட்டத்தைத் தீட்டுவதில் வல்லவனாக இருக்கவேண்டும் என்பதை, 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு' எனும் குறள் மூலம் பொய்யாமொழி வலியுறுத்துகிறது.

நமது வாழ்வை சீர்படுத்துவதே இலக்கியம். தமிழர்கள் அவசியம் படிக்கவேண்டிய இரு உன்னத இலக்கியங்கள் திருக்குறள், திருவாசகம் என்பனவாகும். இவற்றுள் திருக்குறள் உலக அரங்கில் தமிழினை நிலைநிறுத்தத்தக்க முதல் நூலாகும். திருக்குறள் எனப்படுவது வற்றாத சுரங்கம். திருக்குறளில் அரசன், அமைச்சர், குடிகள் பற்றிக் கூறப்படும் கருத்துகள் இன்றைய ஆட்சியாளர்களுக்கும் பொருந்தக்கூடியவையாகும். திருக்குறளில் பொருட்பால் பற்றிக் கூறும் 70 அதிகாரங்களில் 28 அதிகாரங்கள் 'அரசியல்' பற்றிக்கூறுகின்றன.

வலியது மெலியதை விழுங்குவது உலக இயல்பு. அரசனும் பலசாலியாக இருந்தால் மட்டுமே தனது மக்களைக் காப்பாற்ற முடியும். இந்தவகையில் ஒற்றர்களைக் கையாளுவதும் அரசியலில் 'தருமம்' ஆகின்றது. முக்கியமானவர்கள் தலைமைப் பதவிக்கு வர வேண்டும்.

ஓர் இனத்தின் தலைவன் அந்த இனத்தின் சார்பாக, மற்றவர்களுடன் ஆலோசிக்காது தனியே முடிவெடுத்தால், அந்த இனமே அழியும். எனவே அரசன் கல்வி, கேள்வி, அறிவு என்பவற்றில் சிறந்து விளங்கவேண்டும். 'படை, குடி, கூழ், நட்பு, அரண், அமைச்சு ஆறும் உடையான் அரசருள் ஏறு' எனும் திருக்குறள், அரசன் அரசர்களுக்கும் அரசனாகத் திகழ்வதற்கு கடைப்பிடிக்க வேண்டியவற்றை வலியுறுத்துகின்றது.

அரசன் வரவு, செலவுத் திட்டத்தைத் தீட்டுவதில் வல்லவனாக இருக்கவேண்டும் என்பதை, 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு' எனும் குறள் மூலம் பொய்யாமொழி வலியுறுத்துகிறது.

அரசன் முதலில் தனது குற்றங்களைக் கண்டு அவற்றை நீக்க வேண்டும். அதன் பின்னரே மற்றவர்களின் குற்றங்களைக் காணவேண்டும். ஏனெனில், அரசனின் வழியையே குடி மக்களும் பின்பற்றுவர். இக்கருத்தினைத் திருவள்ளுவர் 'தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற் பின் என் குற்றமாகும் இறைக்கு' என்ற குறள் மூலம் வலியுறுத்துகிறார்.

அரசனே நாட்டின் வளத்தை மேம்படுத்த வேண்டியவனும் ஆவான்.

அரசன் மந்திரிகளை நியமித்து அவர்களின் ஆலோசனைப்படி ஆட்சி நடத்தவேண்டும் என 'அர்த்தசாஸ்திரம்' குறிப்பிடுகிறது. 'மந்திரி இல்லாமல் அரசன் முடிவெடுக்கக்கூடாது' என சுக்கிர நீதி வலியுறுத்துகிறது. இந்தவகையில் திருவள்ளுவரும் அமைச்சர்களின் அவசியத்தை வலியுறுத்துகிறார். அவர் அரசனுக்குச் சமமான அந்தஸ்தினை அமைச்சர்களுக்கும் வழங்கியுள்ளார். அமைச்சர்களின் செயற்பாடுகளில் அறம், சத்தியம் என்பன இருக்கவேண்டும் என்பதை 'வினைத் தூய்மை' எனும் அதிகாரத்தில் வலியுறுத்துகிறார். இவ்வாறே எடுத்த முடிவில் உறுதியாக நிற்கவேண்டியதன் அவசியத்தை 'வினைத் திட்டம்' எனும் அதிகாரத்தில் வலியுறுத்துகிறார். பத்து அதிகாரங்களில் அமைச்சருக்குக் கடமைகளை வலியுறுத்துகிறார்.

'பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்லது அமைச்சு' எனும் திருக்குறள் பகைவரைப் பிரித்தல், நல்ல நண்பர்களைச் சேர்த்தல், பிரிந்த நல்ல நண்பரை மீண்டும் சேர்த்தல் இவற்றில் வல்லவனே அமைச்சன் என விளக்குகிறது. அரச தூதுவர்களாக நியமிக்கப்படுவோருக்கான பண்புகளை 'தூது' எனும் அதிகாரம் குறிப்பிடுகிறது.

இன்றைய ஜனநாயக ஆட்சி மரபில் ஆட்சியாளர்கள் காலத்துக்குக் காலம் தேர்தல் மூலமாக மாறுவார்கள். ஆனால் மக்கள் மாறமாட்டார்கள். 'பண்பான மக்கள் சிலராவது இருப்பதால் தான உலகம் அழியாது உள்ளது' என திருக்குறளில் குறிப்பிடப்படுகிறது. உயர் குடி என்பதும் தாழ் குடி என்பதும் பிறப்பில் இல்லை. அவர்களின் பண்பில் தான் உள்ளது.

'இரந்து உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' எனும் குறள் 'உலகைப் படைத்த இறைவன், இரந்து உயிர் வாழ்தல் வேண்டுமென விதித்தானாயின் அவன் பரந்து கெடுக' எனக் கூறுவதன் மூலம் மக்களைக் கையேந்தும் நிலையிலிருந்து காப்பாற்றவேண்டிய ஆட்சியாளரின் பொறுப்பை வலியுறுத்துகிறது. ஆகவே, இம்மண்ணில் நல்ல மனிதர்களை உருவாக்கவேண்டிய தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் திருக்குறள் கூறும் கருத்துகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.




தம் கீழ் உள்ள குழுவினரைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் வேண்டும். தலைவனுக்கு 'அதிமானம்' இருப்பின் அது குற்றமாகும். அதாவது, பிழை என்று தெரிந்தால் மானம் பார்க்காது, ஒத்துக் கொண்டு திருந்தவேண்டும். தலைவனின் அதிமானம் அவனது இனத்தையே அழித்துவிடும். கடும் பற்றுள்ளம், காமம், வெகுளி என்பன தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்குக் குற்றமாகும். அரசன் தனது குற்றமொன்றை நீக்கமுடியாதவனாயின் அதை மற்றவர்களுக்குத் தெரியாது வைத்துக்கொள்ள வேண்டும் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். ஏனென்றால் தலைவனின் பலவீனத்தின் வழியே எதிரி நுழைந்து விடுவான் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வைப் பேறாக்கும் சூரிய நமஸ்காரம்!

ஜீன் மாதம் 21ஆம் திகதியாகிய நாளைமறுதினம் சர்வதேச யோகா தினமாகும். அதைமுன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.



■ கலாநிதி பாலசுப்பிரமணியம் சுதாகரன்

சூரிய நமஸ்காரம் என்பது சூரியனை வணங்குதல் என்று பொருள். ஆசனம், பிராணயாமம், மந்திரம் மற்றும் சக்கர தியானம் ஆகியவற்றை ஒன்றிணைத்து பல்வேறு விதங்களில உடல் பயிற்சிகளின் எல்லைகளைக் கொண்ட ஒரு முழுமையான உடற்பயிற்சியாக சூர்ய நமஸ்காரம் உள்ளது. சூர்ய நமஸ்காரம் பன்னிரண்டு ஆசனங்கள் ஒருங்கிணைந்த ஆசன முறை ஆகும்.

சூரிய நமஸ்காரம் சுவாசம், உடல் மற்றும் மனம் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து செய்யும் பயிற்சி முறை. சில காரணங்களால் உடல் பயிற்சியோ அல்லது யோகாவோ செய்ய முடியாதவர்கள் சூர்ய நமஸ்காரம் செய்வதன் மூலம் சிறந்த பலனைப் பெறுவர். சூர்ய நமஸ்காரத்தில் உள்ள ஆசனங்கள் உடலில் உள்ள பெரும்பாலான உறுப்புகளின் சீரான செயற்பாட்டுக்கு உதவுகிறது.

சூரிய நமஸ்காரம் நமது ஆன்மீக வாழ்வுடனும், ஆரோக்கிய வாழ்வுடனும் ஒன்றிய அறிவியல் மருத்துவக் கூறுகளை உள்ளடக்கிய நோய்தீர்க்கும் யோகா பயிற்சியாகும். தொன்று தொட்டே நம் மக்கள் பின்பற்றி வந்த ஓர் ஆசார முறை சூரிய நமஸ்காரம். உடல் மற்றும் மனது உறுதியடையவும் அமைதியடையவும் உதவும் ஆசாரமிது. இதை விதி முறைகள் படி செய்யும்போது உடற்பாகங்களில் ஆற்றலும் சக்தியும் வருகின்றது. யோகாவின் பார்வையில், சூரிய நமஸ்காரங்களை சீராகச் செய்வது மிகவும் முக்கியம். சூரிய நமஸ்காரம் அடிப்படை உடற்பயிற்சிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்த சூரிய நமஸ்காரத்தை நாம் தொடர்ந்து செய்யும்போது, எமது உடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. சூரிய நமஸ்காரத்தில் உடல் அசைவுகளும் மூச்சு ஓட்டமும் இணக்கமாக நடைபெறுகின்றன. நுரையீரல்களில் காற்றோட்டம் தாராளமாகின்றது. இரத்தம் உயிர்க்காற்றால் நலம் பெறுகின்றது. ஏராளமான கரியமில வாயுவையும் பிற நச்சுப் பொருள்களையும் மூச்சு மண்டலத்திலிருந்து வெளியேற்றுவதன் மூலம் சூரிய நமஸ்காரம் உடலுக்குப் பெரும் நன்மை விளைவிக்கின்றது.

அதிகாலைநேரத்தில் நம் உடலில் படும் சூரிய ஒளி தேக ஆரோக்கியத்திற்கு முக்கியமான பங்கு வகிக்கிறது. இதைத்தான் பாரத பூமியில் வாழ்ந்த சித்தர்கள் காலை வெயிலில் ஆரம்பிக்கும் பித்தம், மாலை வெயிலில் தணிந்து போகும் என்றனர். சூரிய ஒளியைக் கொண்டு கொடிய நோயான காமாலையையும் குணப்படுத்தலாம் என்கிறது அதர்வண வேதம். மேற்கத்திய நாடுகள் உட்பட உலகின் எல்லாப் பாகங்களிலும் இந்த ஆசார முறை பிரசித்தி பெற்றிருக்கிறது.

## மருத்துவமாகும் சூரிய வணக்கம்

சூரிய நமஸ்காரம் வாயிலாக நமது உடலிலுள்ள எல்லா மூட்டுகளுக்கும் அசைவு ஏற்படுகிறது. சருமத்தில் விற்றமின் டி உற்பத்தி செய்யும் திறன் காலை சூரிய ஒளிக்கதிர்களுக்கும் உண்டு. கல்சியம் உற்பத்தியை கட்டுபடுத்தும் திறனும் உண்டு என்பதை அறிவியல் துறைகள் அங்கீகரித்துள்ளன. மேலும் உடலுறுப்புகள் உறுதி பெறுவதால் காச நோயணுக்களின் ஆக்கிரமிப்பையும் தடுக்கின்றன. தனி அறையில் அமைதியில் செய்வது புத்துணர்வை வளர்க்கும். சூரிய நமஸ்காரம் ஜீரண மண்டலத்திற்கு உயிரூட்டி ஆற்றலை அளிக்கின்றது. கல்லீரல், வயிறு, மண்ணீரல், குடல்கள் எல்லாம் நன்றாக மசாஜ் செய்யப்படுகின்றன. இதனால் மலச்சிக்கல் மறைகின்றது. வயிற்று உறுப்புகளில் இரத்தம் தங்குவதில்லை என்பதால் உடல் உறுதியடைகின்றது. இது இரத்தக் கொதிப்பை மட்டுப்படுத்தும். இதயத் துடிப்பைச் சமன் செய்யும். கை, கால் போன்ற உறுப்புகளுக்குச் சூடு கொடுத்துக் காக்கும். நரம்பு மண்டலத்தை விழிப்புடனிருக்க வைப்பதில் சூரிய நமஸ்காரத்திற்கு இணையானது வேறு ஒன்றுமில்லை. சிம்பதட்டிக், பாராசிம்பதட்டிக் நரம்புகளின் செயல்களை நெறிப்படுத்துவதன் மூலம் நல்ல ஓய்வுக்கும் உறக்கத்துக்கும் உதவுகின்றது. இதனால் நினைவாற்றல் அதிகரிக்கின்றது.! உடல் பொலிவடையும்: சூரிய நமஸ்காரத்தை முறைப்படி செய்யும் போது வியர்வை உண்டாகும். ஏராளமாக உடலில் உள்ள நச்சுப்பொருள்கள் தோலின் வழியே வெளியேறும். நன்றாக வியர்க்கும் வரை இப்பயிற்சி செய்வது நல்லதென சூரிய நமஸ்காரத்தைப் பிரபலப்படுத்திய அவுண்ட் அரசர் கூறுகின்றார். வியர்வை பத்துப் பதினைந்து நிமிடங்களிலேயே வெளிவருவதை அனுபவத்தில் அறியலாம். தோலின் மூலம் வியர்வை வெளிவரும் அளவுக்கு உடல்நலம் ஓங்கும். சூரிய நமஸ்காரத்தில் கழுத்து முன் பின் வளைகின்றது. இதனால் தைராயிட், பாராதைராயிட் சுரப்பிகளுக்கு இரத்தம் கிடைக்கின்றது. அவை செயற்படுவதனால் எல்லா எண்டோக்கிரைன் சுரப்பிகளும் தமக்குரிய இயல்பான காரியங்களைச் செய்கின்றன. தோல் புத்துணர்வு பெற்றுப் பொலிவடைகின்றது. சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒரு நாளில் மூன்று முதல் பத்து நிமிடங்களே போதும். இது உடம்பு முழுமைக்கும் பயிற்சி அளிக்கின்றது சூரிய நமஸ்காரத்திற்குச் செலவொன்றுமில்லை. பளுவான கருவிகள் எதுவும் தேவையில்லை. வேண்டியதெல்லாம் நான்கு சதுர மீற்றர் இடம்தான்.

தொடர்சியாக சூரிய நமஸ்காரம் செய்வதினால் அகால வயது முதிர்ச்சியை ஓரளவுக்குத் தடை செய்யலாம். மூட்டுகள் நல்ல லாவகமடைகின்றது. தொப்பை வயிறு வருவதை கட்டுப்படுத்த இயல்கின்றது. மனதுக்கும் உடலுக்கும் உற்சாகம் நிலைநிறுத்தவும் சூரிய நமஸ்காரம் உதவுகின்றது. இது தொடர்ச்சியாக சுவாசத்தை ஒருங்கிணைக்கிறது. ஆகவே, உடல் மற்றும் மனதிற்கு சிறந்த பயிற்சியை அளிக்கிறது.நமது தசைகள் நன்கு இயங்குகின்றன. இது நம்மை சுறுசுறுப்பாக இயங்க உதவும். மேலும், வலுவான முதுகெலும்பு மற்றும் உறுதியான தசைகளை அடையவும், ஒருவர் நிதானமாக இருக்கவும் உதவுகிறது.. யோகாவின் பார்வையில், சூரிய நமஸ்காரங்களை சீராகச் செய்வது மிகவும் முக்கியம். அந்த வகையில் மிக வேகமாகவும் அல்ல, மிக மெதுவாகவும் அல்ல.

சூரிய நமஸ்காரம் மெதுவாக செய்யப்படும்போது, 510 நிமிடங்களில் சுமார் 20 முதல் 30 கலோரிகள் எரிக்கப்படுகின்றன. இது நீங்கள் பின்பற்றும் சுவாச முறையைப் பொறுத்தது. ஏனென்றால், நீங்கள் எரிக்கும் கலோரிகளின் அளவுகளில் வேகம் முக்கியமான பங்கு வகிக்கிறது. மேலும், பயிற்சியின் போது ஒருவர் செலவழிக்கும் கலோரிகளின் அளவு பொருத்தமான சுவாச நுட்பங்களைப் பயன்படுத்துவதை நம்பியிருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.உடலின் வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்க இது ஒரு சிறந்த வழியாகும்.

## கூடுதலான பயன்பெற

ஒவ்வொரு சூரிய நமஸ்காரமும் மொத்தம் பன்னிரண்டு ஆசன நிலைகளை உள்ளடக்கியதாகும். பன்னிரண்டு ஆசனங்கள் இணைந்தது ஒரு சுற்று. இவ்வாறு 12 நமஸ்காரமும் நம் உடல் உறுப்புகளான மூளை, இருதயம், வயிற்றிலுள்ள சுரப்பிகளைத் தூண்டும் ஓம் எனும் பிரணவ மந்திரத்துடன் சேர்த்து சூரியபகவானுடைய பன்னிரண்டு திருநாமங்களையும் சொல்லி வணங்கியபடி செய்ய வேண்டும். நமக்கு மன, உடல், ஆத்ம நலன் தரும் சூரியபகவானின் திருநாமங்களை உரக்க உச்சரிப்போம்.


ஓம் மித்ராய நமஹ... சிறந்த நண்பன்
ஓம் ரவயே நமஹ... போற்றுதலுக்குரியவன்
ஓம் சூர்யாய நமஹ... ஊக்கம் அளிப்பவன்
ஓம் பானவே நமஹ... அழகூட்டுபவன்
ஓம் ககாய நமஹ... உணர்வுகளுக்கு வலிமை தருபவன்
ஓம் பூஷ்ணே நமஹ... புத்துணர்ச்சி தருபவன்
ஓம் ஹிரண்யகர்ப்பாய நமஹ... ஆற்றல் அளிப்பவன்
ஓம் மரீசயே நமஹ... நோய்களை அழிப்பவன்
ஓம் ஆதித்யாய நமஹ... கவர்ந்திழுப்பவன்
ஓம் சவித்ரே நமஹ... சிருஷ்டிப்பவன்
ஓம் அர்க்காய நமஹ... வணக்கத்திற்கு உரியவன்
ஓம் பாஸ்கராய நமஹ... ஒளிமிகுந்து பிரகாசிப்பவன்.

மேற்கண்ட மந்திரத்தை உச்சரித்தவாறு சூரிய நமஸ்காரம் செய்யும்போது நமது மனம் சிதறாமல் ஒருமுகப்படுகிறது. மந்திரத்தை உச்சரிக்கும்போது அதன் அதிர்வு நமது உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று பல உணர்வுகளை ஏற்படுத்தும் என்பது விஞ்ஞானபூர்வமான உண்மையாகும்.

பிரபஞ்சத்தின் ஆழ்ந்த அமைதியை, அருட்பெரும் ஜோதியை, கருணையை, காதலை, அன்பை, அடக்க முடியா சக்தியை உங்கள் மனதுக்குள் நிலைநிறுத்தி நேர்கோட்டில் உணரவைப்பது யோகா! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**SLIIT NORTHERN UNI** யின் நான்கு வருட
கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Data Science
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

**SLIIT CITY UNI Program at NorthernUni**

- Foundation in Information Technolgy.
- BSc (Hons) Computer Science and Software Engineering.
- BSc (Hons) Computer Networking.
- Foundation in Business Management.
- BA (Hons) Business Administration.

**நினைவில் கொள்ள வேண்டிய திகதி**

விண்ணப்ப முடிவுத்திகதி

**26 JUNE 2024**

தகுதிகாண் பரீட்சை

**29 JUNE 2024**
(10:00AM TO 11:00AM)

**மொழி மூலம்**
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

NORTHERN UNI

Call us now:
**077 147 1471**

northernuni.lk
apply@northernuni.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 02 . 1935



மறைவு 15 . 06 . 2024

### இராசரத்தினம் நவமணி

கோப்பாய் தெற்கை சேர்ந்த இராசரத்தினம் நவமணி கடந்த 15.06.2024 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், விசுவநாதர் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், நிர்மலாதேவி (இந்தியா), காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் பிறேமலா (கனடா), காலஞ்சென்ற மகீதரன் மற்றும் சுபஸ்ரீ (இந்தியா), சுசியந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவிமோகன் (கனடா), திருக்குமரன் (குமரன் போட்டோ) ஆகியோரின் மாமியாரும், இராசமணி, நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிதுறா, ரிசான், றேனோயன், கரிஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
**077 722 2601**
**077 722 1412**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(cs 55417) (N-1)

## கால்நடைத் தீவனம் வழங்குநர்கள் தேவை

எமது சங்கத்தின் பால்வழங்கும் அங்கத்தவர்களுக்கு விநியோகம் செய்வதற்கு தரமான பருப்புக்குறுணல், மகாவலி தீவனம், பிறிமா தீவனம் போன்றவற்றை எமது சங்கத்தின் கிளை நிலையங்களுக்கு கொண்டுசென்று வழங்கக்கூடியவர்கள் பின்வரும் முகவரிக்கு நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**பொதுமுகாமையாளர்**
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**
**021-222-0032**

## பயிலுநர் விற்பனைஉதவியாளர், பயிலுநர் தொழிலாளிகள், பகுதி நேர தொழிலாளிகள்

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாட்களில் ரூபா20/- செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 26.06.2024 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)**
**திருநெல்வேலி கிழக்குஇ கோப்பாய்**
**021-222-0032**

## பசுப்பாலில் உற்பத்தி செய்யப்படும் பால்பொருட்கள் விற்பனைக்குண்டு

எமது சங்கத்தின் உற்பத்திப்பொருட்களான மில்க் லொலி, நெய், கொழுப்புள்ள பனீர் (Fat Paneer), கொழுப்பற்ற பனீர் (Nonfat Paneer), கப்தயிர், யோக்கட், நிகழ்வுகளுக்கு சுடுபால், பதனிடப்பட்ட பால்பைக்கற், சுவையூட்டப்பட்ட பால்பைக்கற் போன்றவை விற்பனைக்குண்டு. மேற்படி பொருட்களைப் பெற்று விற்பனை செய்வதற்கு ஆர்வமுள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பொதுமுகாமையாளர்**
**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்**
021-222-0032

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்.மாவட்டச் செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், மருத்துவ முகாமொன்று மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

(ம-25-66)

## வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு

கந்தரோடை ஸ்கந்தா பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப் படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 417 9120, 076 358 2126, 076 225 4729
Whats app:- 0091 915 954 0807

(CS/55418) J-1

## காணி விற்பனைக்குண்டு

யாழ் சிவன்கோவிலுக்கு அண்மையில் **K.K.S Road** முகப்புடன் 5 பரப்பு, 6 பரப்பு காணியும், யாழ் மின்சார நிலைய வீதி பழைய தபாற்கந்தோர் வீதியில் 4 1/2 பரப்பு காணியும், யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **077 723 2535**

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### விக்கினேஸ்வரன் அபிநயன்

(3ஆம் வருட பொறியியல் பீட மாணவன் -
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)

திதி - ஆனிமாத வளர்பிறை திரியோதசி (19.06.2024)



கார்த்திகையில் பிறந்தவனே
கண்ணியமாய் வாழ்ந்தவனே
கம்பீர நடை கொண்டு
ரசிக்க வைத்தவனே
காலமெல்லாம் நீவாழ
கனவு கண்டோம்
காலனவன் பொறுக்காது
கடவுளிடம் சேர்த்துவிட்டான்
கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்




தோற்றம் 30.11.2000
மறைவு 16.06.2023

**குடும்பத்தினர்.**

(CS55373) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னிறைவுப் பொருளாதாரத்துக்கு தமிழர் பாரம்பரியம்!

நி.பிரதிகா



'எள்ளாத எள்ளிச் செயல் வேண்டும் தம்மோடு,
கொள்ளாத கொள்ளாது உலகு'

எனும் வள்ளுவர் வாக்குக்கமைய நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தக்கூடிய வகையிலேயே தொழில்கள் உருவாக்கப்பட வேண்டும். அதற்காக நாம் சுயதொழிலை தேர்ந்தெடுப்பது விருத்தியை உண்டாக்கக்கூடியதாகும். ஒருவர் பணம் அல்லது சேவை மனப்பான்மை அல்லது இரண்டுக்குமாக தமது உழைப்பை பகுதி நேரமாகவோ அல்லது முழுநேரமாகவோ செலவு செய்தல் தொழில் எனப்படும். வேலைவாய்ப்பின்மைக்கு அருமருந்தாக சுயதொழில் அமைகின்றது. இலங்கை தற்போது பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகிறது. சத்தான உணவு, நோயற்ற வாழ்வு என்பன கிடைப்பது கேள்விக்குறியாகவே உள்ளது. நம் நாடு தன்னிறைவுப் பொருளாதாரத்திலே வீழ்ச்சி கண்டு வருகின்றது. மீண்டும் நாம் தன்னிறைவில் மறுமலர்ச்சியைக் காணவேண்டுமெனில் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அதிலும் குறிப்பாக தமிழர்களாகிய நாம் எமது பாரம்பரியத் தொழில்களைப் பழையபடி முன்னேற்றுவதற்கு ஆர்வம்காட்ட வேண்டும். விவசாயமும், விலங்கு வேளாண்மையும் வளங்களை அள்ளித் தரக்கூடிய தொழில்களாகும். இருப்பினும் இன்றைய சமூகத்தினர் அவற்றைச் செய்வதை வெட்கமாகவும், வேடிக்கையாகவும் பார்க்கின்றனர்.

**நம் நாடு தன்னிறைவுப் பொருளாதாரத்திலே வீழ்ச்சி கண்டு வருகின்றது. மீண்டும் நாம் தன்னிறைவில் மறுமலர்ச்சியைக் காணவேண்டுமெனில் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.**

### வடக்கும் கிழக்கும் சுயதொழில் தாயகம்

தமிழர் அதிகமாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மற்றைய பிரதேசங்களைக் காட்டிலும் மண்வளம், நிலவளம், நீர்வளம் என்பவை அதிகளவில் காணப்படுகின்றன. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 15.2 சதவீதம் கிழக்கு மாகாணத்திலும், 13.5 சதவீதம் வடமாகாணத்திலும் மொத்தமாக 28.7 வீதமாக நிலப்பரப்பு காணப்படுகின்றது. நீர்ப்பரப்பு என்ற வகையில் வடமாகாணத்தில் 8 சதவீதமும், கிழக்கு மாகாணத்தில் 6.35 சதவீதமுமாக மொத்தமாக 14.35 சதவீதம் காணப்படுகின்றது. திறந்தமுறைக் கால்நடை வளர்ப்புப் பாரம்பரியத்தைக் கொண்ட கால்நடைத்துறையில் பல சாத்தியமான வளங்கள் இவ்விரு மாகாணங்களிலும் உள்ளது. 'தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது' இத்தனை வளங்களைக் கொண்ட பிரதேசத்தில் வாழும் நாம், வீட்டுத்தோட்ட விவசாயம், கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு அவைகள் சார்ந்த ஏனைய உற்பத்திகள் போன்ற சுய தொழில்களில் ஏன் ஈடுபடக்கூடாது? இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்பு படியிருப்பதால் இவற்றை மேற்கொள்வது எளிதாகவே இருக்கும். விளங்கும்படியாக கூறினால், நாம் வளர்க்கும் தேனீக்கள் நாம் பயிரிட்ட பயிர்களின் பூக்களிலுள்ள மதுரத்தை சேகரிக்கும் போது அங்கு மகரந்த சேர்கை நடைபெற்று விளைச்சல் அதிகரிக்கின்றது. நாம் வளர்க்கும் கால்நடைகளின் கழிவுகளை பயிர்களுக்கு சேதனப்பசளையாக இடலாம். பயிர்களின் மீதிகளை கால்நடைகளுக்கு உணவாக வழங்கலாம். இவ்வாறு ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று பயன்தரக்கூடியவையே. பலவிதமான சுயதொழில்கள் பரந்து காணப்பட்டாலும் தமிழர் பண்பாட்டோடு கலந்த நமது பாரம்பரிய பண்ணைத்தொழில்கள் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளக்கூடிய பாரம்பரிய சுயதொழில்கள் தொடர்பில் சற்று விரிவாக ஆராய்வோமாக இருந்தால்,

### வீட்டுத்தோட்ட விவசாயம்

நாம் வாழும் வீட்டுக்கு அருகிலோ, பின்புறமாகவோ உள்ள நிலப்பகுதியில் காய்கறிகள், கீரைவகைகள், தானியங்கள், பழவகை மரங்கள் மற்றும் தென்னை களையும் பயிரிடலாம். தற்போதைய கடும் வெப்பம், வரட்சியால் ஏற்பட்ட தண்ணீர் பற்றாக்குறைக்கு தீர்வாக துளி மற்றும் துமி நீர்ப்பாசன முறைகளை பயன்படுத்தி வினைத்திறனாக பயிர்செய்கை மேற்கொள்வது நல்ல விளைச்சலைப் பெற்றுத்தரும். இரசாயனப்பசளைகளுக்குப் பதிலாக இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான விளைச்சலைப் பெற முடியும். இதனால் நமது போசனைத்தேவை பூர்த்தியாவதோடு அவற்றை விற்பனை செய்வதன் மூலம் நல்ல வருவாயையும் ஈட்டிக்கொள்ள கூடியதாகவிருக்கும். உள்ளூர்ச் சந்தைகளுக்கு மட்டுமன்றி இலங்கையின் ஏனைய இடங்களுக்கும் விளைபொருள்களை ஏற்றுமதி செய்யும் முயற்சியில் ஈடுபட்டால் பெரியதொரு ஒரு சந்தை வலையமைப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

### கால்நடை வளர்ப்பு

இது நாகரிகம் தொடங்கிய காலத்தோடு சேர்ந்து தொடங்கிய புராதன தொழிலாகும். பால், முட்டை, இறைச்சி மற்றும் வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் எமக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். நமது பிரதேசங்களில் அனேகமாக திறந்தவெளி வளர்ப்பு முறையை மேற்கொள்ள போதுமானளவு நிலப்பரப்பு காணப்படுகின்றது. இருப்பினும் மேய்ச்சல் தரைகள் குறைந்து வருவது பெரும் சவாலாகவுள்ளது. இதற்குத் தீர்வாக தீவனம், அடர் தீவனம் போன்ற உள்ளக வளர்ப்பு முறைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். கால்நடைகளுக்குத் தேவையான அடர்தீவனம், பசுந்தீவனம், உலர் தீவனம் முதலியவற்றை வழங்குவதன் மூலம் தரமான பால், இறைச்சி உற்பத்தியைப் பெறலாம். தற்காலத்தில் பால்மா உற்பத்திகள் அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இது வீண் அந்நிய செலாவணியை ஏற்படுத்தும். நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பது பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வாகவே அமையும். அத்துடன் நமது புரதத்தேவையை பூர்த்தி செய்து கொள்ளவும் முடிகின்றது.

கோழி வளர்ப்பு தற்காலத்தில் வருமானத்தை முதன்மை நோக்காகக் கொண்டு வளர்க்கப்படுகின்றன. இவற்றிலிருந்து முட்டை, இறைச்சி போன்றவற்றை பெறுவதன் மூலம் நமது புரத உணவுத்தேவை பூர்த்தியாவதுடன், நல்ல வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடிகிறது.

### தேனீ வளர்ப்பு

இவை தமது எச்சிலிலுள்ள 'இன்வர்டேஸ்' நொதிப்பொருளால் அவை சேகரிக்கும் மதுரத்திலுள்ள நீரின் அளவை குறைத்து தேனாக மாற்றுகின்றது. தாவரங்களில் மகரந்த சேர்கையை ஏற்படுத்தி அவற்றின் இனவிருத்திக்கு உதவுகின்றன. தற்போது செயற்கையான முறையில் இவை வளர்க்கப்படுகின்றன. இதற்காக சட்டங்களுடன் கூடிய பெட்டி ஒன்று பயன்னடுத்தப்படுகின்றது. வீட்டுத்தோட்டம் மற்றும் பூந்தோட்டத்தின் மத்தியில் அதனை நிலைப்படுத்தி வைப்பதன் மூலம் அதிகளவான தேனீக்களை கவர முடியும். தேனிலிருந்து மெழுகு, அழகு சாதனப் பொருட்கள், பூச்சுவகை, அச்சுக்கள், அரசுப் பசை போன்றவை தயாரிக்கப்படுகின்றன. இவற்றுக்கு மவுசு அதிகம். தேனீக்களின் விஷம் மருத்துவ தேவைகளுக்காக பயன்படுகிறது. தேன் மட்டுமே 1 லீற்றர் ஆயிரத்து 500 தொடக்கம் இரண்டாயிரம் ரூபா வரை விற்க்கப்படுகின்றது.

மேற்குறித்த இவ்வாறான தொழில்களில் பிரதான விளைபொருள்களைக் கொண்டு அவை சார்ந்த ஏனைய உற்பத்திகளையும் மேற்கோண்டு சந்தைக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் நமது பண்ணையை விரிவுபடுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இவ்வாறான சுயதொழில் நடவடிக்கைகளுக்கென அரசு பல உதவித்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆனால் அது தொடர்பான தெளிவு எம்மிடத்தில் இல்லை என்பதே உண்மை. சூழலுக்கு இசைவான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்தியே எம் முன்னோர்கள் உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அதை என்று கைவிட ஆரம்பித்தோமோ அன்றிலிருந்து ஆரோக்கியமான வாழ்விலிருந்தும் பொருளாதாரப் பலப்படுகையில் இருந்தும் பின்னோக்கி நடைபோட ஆரம்பித்துள்ளோம். ஆதலால், அவற்றை மீண்டும் இறுகப்பற்ற வேண்டியது தற்போது காலத்தேவையே.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு

# குருந்தூர்மலையில் நேற்று வழிபாடுகள்



முல்லைத்தீவு, ஜூன் 19
முல்லைத்தீவு குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை சிவவழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

பொலிஸார் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்களின் தீவிர கண்காணிப்புக்கு மத்தியில் மு.ப. 10 மணிமுதல் இந்த வழிபாடுகள் இடம்பெற்றன. பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்த வழிபாட்டில் கலந்துகொண்டனர். (ம-66)

# சட்டமா அதிபர் பதவி நீடிப்பு நம்பிக்கையைச் சிதைக்கும்

பீரிஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 19
சட்டமா அதிபரின் பதவிக் காலத்தை நீடிப்பது குறித்துதீர்மானம் எடுக்கும் பொறுப்பு அரசமைப்புப் பேரவைக்குக் கிடையாது. அரசமைப்புப்பேரவையை நெருக்கடிக்குள்ளாகும் வகையில் ஜனாதிபதி செயற்படுகிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 41ஆவது உறுப்புரையின் பிரகாரம் உயர்பதவிநியமனங்களுக்காக முன்வைக்கப்படும் பரிந்துரைகளை அனுமதித்தல் அல்லதுமீளாய்வு செய்தல் அரசமைப்புப் பேரவையின் பொறுப்பாகும். பதவிக்காலத்தை நீடிப்பதை அனுமதிப்பதும் அல்லது ஆராய்வதும் பேரவையின் செயற்பாடல்ல. இலங்கை அரச நிர்வாகக் கட்டமைப்பில் இதுவரை 47 சட்டமா அதிபர்கள் பதவி வகித்துள்ளார்கள். இவர்களில் ஒருவரது பதவிக் காலம் ஒரு நாள் கூட நீடிக்கப்பட வில்லை. பதவிக் காலம் நிறைவடைந்தவரின் பதவிக் காலத்தை நீடிக்கும்போது அந்த நபர் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் சார்பாகச் செயற்படுவார். ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடுகளால் சட்டமா அதிபர் பதவி மீதான மக்கள் நம்பிக்கை சிதைவடையும். சட்டமா அதிபர் திணைக்களத்தை யும் ஜனாதிபதி தனது அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

# 22ஆம் திகதி வரை வடக்கில் மழை

யாழ்ப்பாணம், ஜூன் 19
எதிர்வரும் 22ஆம் திகதிவரை வடமாகாணத்தில் கனமழையுடனான காலநிலை நிலவும் என்று வானிலையாளரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

இன்று (நேற்று) முதல் தென்மேற்கு பருவக்காற்று மழையின் இரண்டாவது சுற்று ஆரம்பமாகும். இதனால், கொழும்பு, களுத்துறை, காலி, இரத்தினபுரி, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்கள் அடுத்து வரும் ஏழு நாள்களுக்கு கனமழை பெறும் வாய்ப்புள்ளதுடன், இம் மாவட்டங்களின் சில பகுதிகள் வெள்ள இடர்களுக்கு உட்பட வாய்ப்புள்ளது.

அடுத்த வாரமளவில் மத்திய வங்காள விரிகுடாவில் காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. எனினும், அடுத்த வார முற்பகுதியிலேயே இதனை உறுதிப்படுத்த முடியும் -என்றார். (ம-66)

## தவறான முடிவெடுத்து குடும்பத்தலைவர் பலி!

மன்னார், ஜூன் 19
மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் தவறான முடிவெடுத்து குடும்பத் தலைவர் ஒருவர் நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளார்.

தனது வயல் நிலத்துக்குச் சென்ற அவர் மயக்கமாகக் கிடப்பதைப் பார்த்த மக்கள் அவரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். எனினும் அவர் சிகிச்சையின்போது உயிரிழந்தார். (ம-213)

## குளவி கொட்டியதில் மூவர் சிகிச்சையில்!

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியில் பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட மூவருக்குக் குளவி கொட்டியதால், புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 46 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர், வள்ளிபுனம் கல்லூரியில் கல்வி கற்கும் தனது 19 வயதையுடைய மகள் மற்றும் 14 வயதையுடைய மகன் ஆகியோரைப் ஏற்றிக்கொண்டு பாடசாலைக் கருகில் சென்றுகொண்டிருந்தபோதே மூவரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.

அவர்கள் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். (ம-19)

# சேவை நலன் பாராட்டு

திரு துரைராசா சந்திரமௌலீஸ்வரன்




யாழ் போதனா வைத்தியசாலையில் 35 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும் பிரதம தாதிய பரிபாலகராகவும் கடமையாற்றி 30.04.2024 இல் ஓய்வு பெற்றுச் சென்ற திரு துரைராசா சந்திரமௌலீஸ்வரன் அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

CS (778) V-1

# Union's Colors Nite- 2024

## நிகழ்வு அறிவித்தல்

யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் 27.04.2024 இல் ஏற்பாடு செய்யப்பட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்ட **Union's colors nite 2024** நிகழ்வானது. எதிர்வரும் 23.06.2024 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 6.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்பதை யூனியன் மைந்தர்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் ஏற்கனவே பெற்றுக் கொண்ட நுழைவுச் சீட்டுக்களுடன் கலந்து கொள்ள முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**ச.பிறேமிலன்**
**செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம்**
**யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.**

(CS 779) A-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 07 . 1981



இறப்பு 18 . 06 . 2024

## சிவபாலச்சந்திரன் கோபிராஜ்

(Electrical and Plumbing Contractor, Colombo)

பெரியவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிமடமாகவும் கொண்ட சிவபாலச்சந்திரன் கோபிராஜ் நேற்று (18.06.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாலச்சந்திரன் மற்றும் புனிதவதி தம்பதியரின் மூத்த புதல்வனும், துரைராசா- காலஞ்சென்ற பவளம் தம்பதியரின் மருமகனும், றஜிதாவின் அன்புக் கணவரும், ஜிந்துஜன், ஜீனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கபில்ராஜ் (லண்டன்), தர்ஷிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லிகிர்தா, மாலினி, பகீரதன், சசீகரன், றமேஷ், லதாங்கினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நுணாவில் மேற்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீரக்கோடையன் வீதி,**
**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 767) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருண்மியம்...

நேற்றுமுன்தினம் இவ்வாறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
கொன்சியுல் ஜெனரல் சாய் முரளி, ஆர். நாகராஜன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் இணைப்பாளர் பரிஸ், மன்னார் மாவட்ட சுதந்திரக்கட்சியின்முகாமைத்துவப் பணிப்பாளர் சுல்பிகார் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-ம-26)



# நாகபூஷணிக்கு நாளை தேர்

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயக் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா நாளை இடம்பெறவுள்ளது. அதிகாலை 4 மணியளவில் சந்திப்பூசை, 4.30 மணியளவில் அபிஷேகம், 5.30 மணியளவில் விசேடபூசை, காலை 6 மணியளவில் தம்பபூசை, 7 மணியளவில் வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று, காலை 9 மணியளவில் நாக பூஷணி அம்மன் சித்திரத் தேரில் வீதி உலா வரும் திருக்காட்சியும், மாலை 4 மணியளவில் பச்சை சாத்தி அம்மன் அவரோகணம் செய்யும் திருக்காட்சியும் இடம்பெறும். (ம-22-66)

## யாழில்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"யாழ்.மாவட்டத்தில் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த வயோதிபர்கள், பிரபல வர்த்தகர்களும் காரணங்களற்று திடீரெனக் காணாமற்போகும் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதை அவதானிக்கமுடிகின்றது. கடந்த ஏழு வருடங்களாக நடைபெறும் சில விடயங்களை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன். இத்தகைய சம்பவங்கள் வயது மூப்பினால் தன்னிச்சையாக இடம்பெறுபவை என அடையாளப்படுத்தப்படாத நிலையில், அவற்றின் பின்னணி குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.
பிரபல வர்த்தகரான வேலுப்பிள்ளை நடராசா (வயது - 63) கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில், மாதாந்த மருத்துவப் பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குச் சென்ற நிலையில் காணாமற்போயுள்ளார். இவரின் மகன் ஒருவர் ஊடகவியலாளராகக் கடமையாற்றுகின்றார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு, பத்திரிகை விளம்பரம், சமூகவலைத் தளங்கள் மூலமான பதிவுகள் என ஏழு வருடங்களாகத் தேடுதல் நடந்தும் எந்த முடிவும் கிட்டவில்லை.
அதேபோல யாழ். புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி யோகம்பா சோபிநாதன் (வயது - 63) என்பவர் ஆறு மாதங்களுக்கு முன்னர் மர்மமான முறையில் காணாமற்போயுள்ளார். இவர் எங்கே என்பது இதுவரை தெரியாது.
யாழ். புங்குடுதீவு மடத்துவெளியைச் சேர்ந்த பிரபல கோடீஸ்வர வர்த்தகரும், வர்த்தகத்துறை சார்ந்து இலங்கை அரசால் தேசமான்ய விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டவரும், புங்குடுதீவு மக்களால் அதிகம் அறியப்பட்டவருமான வைத்திலிங்கம் கனகலிங்கம் (வயது - 82) 2024 ஆம் ஆண்டு மே 12 ஆம் திகதி மதியவேளை, அவரின் வீட்டின் முன்பாக இருந்தவேளை திடீரெனக் காணாமற்போயுள்ளார்.
பிறிதொருவரின் உதவியற்று நடந்து செல்லவோ அல்லது வாகனங்களில் ஏறிச்செல்லவோ முடியாத நிலையில் இருந்த அவர், திடீரென வீட்டு வாசலில் இருந்தே காணாமற்போயுள்ளமை மர்மம் நிறைந்ததாகவே உள்ளது. இதுவரை அவர் தொடர்பில் எவ்விதத் தகவல்களும் இல்லை.
இவ்வாறு வயோதிபர்கள் காணாமற்போதல், இளைஞர்கள் விசாரணைக்கு அழைக்கப்படுதல், கைதுகள், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுதல் என்பன இங்கு நடக்கின்றன. இந்த நாட்டின் நீதி, சிவில் நடவடிக்கைகள் என்ன என்பது பற்றிச் சிந்தியுங்கள். யாழ்.மண்ணில் இந்த மூன்று வயோதிபர்களுக்கு மேலதிகமாக இன்னும் பலர் காணாமற்போயிருக்கக்கூடும். இவர்கள் பற்றிய தகவல்கள் இதுவரை தெரியவில்லை" - என்றார். (அ-ம-44)

## பெண்களின்...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"ஆண், பெண் சமத்துவச் சட்டமூலம் குறித்து நாடாளுமன்றத்தில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. ஆனால், அதுதொடர்பில் கிடைத்துள்ள உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி பெண்களுக்கு சம உரிமை இல்லை.
நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையான பெண்களால் அந்த உரிமையைப்பெற முடியாது என்பது, இந்த நாட்டின் நாடாளுமன்றத்துக்கும் அரசமைப்புக்கும் எதிரான தீர்மானமாகவே கருதமுடியும் என நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தேன்.
ஆண்களுக்கு நிகரான உரிமைகளைப் பெண்களுக்கு வழங்குவதே எங்கள் நோக்கம். சர்வதேச பெண்கள் அமைப்புகளின் அனைத்து ஒப்பந்தங்களிலும் இது சேர்க்கப்பட்டுள்ளது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை அல்லது வேறு எந்த அமைப்பும் தலையிட முடியாது. அந்தப் பணியை நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளோம்.
எனவே இது தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டாம் என இன்று நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தேன். அதேபோன்று, அந்தத் தீர்மானத்தால் பௌத்த மதத்தின் பாதுகாப்பு நீக்கப்படலாம் என்பதால் அந்தக் கருத்தை ஏற்கமுடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது நாம் அதுகுறித்து அவதானம் செலுத்தி செயற்பட்டு வருகிறோம்" - என்றார். (அ-ம)

## தமிழ்...

குவிந்துள்ளனர் என்று பிவிருத ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"டொலரை யாசகமாகப் பெறுவதற்கு தாய்நாட்டை ஏலமிடும் யுகத்தில், வடக்கில் உள்ள வாக்குகளுக்காக நாட்டை பிளவுபடுத்தக்கூடிய இனவாதச் சட்டங்கள் இயற்றப்படும் உறுதிமொழிகளை வழங்கும் ஜனாதிபதி வேட்பாளர்கள் குவிந்துள்ள யுகத்தில், தன்னைப் பாதுகாக்குமாறு இலங்கை தாய் கதறி அழும் நிலையில், நாட்டைக்காக்கவே இங்கு மக்கள் குவிந்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். மேற்குலகின் தாளத்துக்கேற்ப ஆடும் கைப்பாவைகள் அவர்கள். இவர்களால் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க முடியாது.
சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் என்பது பிரச்சினைக்கான தீர்வு அல்ல, மாறாகப் பிரச்சினைகளை அது மேலும் உக்கிரமாக்கும். எமது ஆட்சியாளர்களுக்கு தூரநோக்குச் சிந்தனை இல்லாதமையால்தான் ஐ.எம்.எப். ஒப்பந்த சரத்துகளுக்குள் சிக்கியுள்ளனர்.
உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்ததுபோல் ஜனாதிபதித் தேர்தலில் கைவைக்கமுடியாது. அன்று போட்ட விளையாட்டை இன்று போட முடியாது. சர்வஜன அதிகாரம் இருப்பதால் விளையாட்டுகள் எடுபடாது. தேர்தலைப் பிற்போடும் விளையாட்டை ஆட முற்பட்டால் ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்படும்" - என்றார். (அ-ம-44)

## தீர்ப்புகளுக்கு...

தில்லை - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வெளியிட்ட கருத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு வலியுறுத்தினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"நாட்டின் முத்தரப்பு ஜனநாயகக் கட்டமைப்பில், நிறைவேற்றுநர், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று நிறுவனங்களிலும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறையும், அதேபோல இவற்றுக்கிடையே அதிகாரப் பகிர்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் குறைபாடுகள் இருப்பின், தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறைக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே இது திருத்தப்படவேண்டும். ஒரு நிறுவனம் மற்றொன்றை அடக்கி அல்லது மௌனமாக்கும் விம்பத்தை உருவாக்காதீர்கள். வேறு ஒரு முறையைப் பின்பற்றி, ஏதேனும் பிழைகள் இருப்பின் அவற்றைச் சரிசெய்யும் அரசியலமைப்பு முறைக்குச் செல்லவேண்டும்.
உயர் நீதிமன்றம் வழங்கிய முடிவுகளை ஆராயத் தெரிவுக் குழுக்களை நியமிப்பதில் எமக்கு உடன்பாடில்லை. குறைபாடுகள் இருப்பின் வேறு ஏற்றுக்கொள்ளத்தக்க சட்டரீதியான ஏற்பாடுகள் ஊடாக இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டும்" - என்றார். (அ-ம-44)

## மனித...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 56ஆவது கூட்டத் தொடரில் காலநிலை மாற்றம், இஸ்ரேல் - பலஸ்தீன போர், ரஷ்ய - உக்ரைன் போர் விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன.
நேற்று ஆரம்பமான 56 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. எனினும், இலங்கை தொடர்பான விவகாரம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள 57 ஆவது கூட்டத் தொடரில் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## அடிகாயங்களுடன்...

புளியம்பொக்கணை - முசிலம்பிட்டியைச் சேர்ந்த சம்சுதீன் அன்பர் (வயது - 27) என்ற இளைஞனின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம)

## வவுனியாவில்...

உறைந்திருந்தனர்.
வவுனியாவின் நெலுக்குளம், பட்டாணிச்சூர், சூடுகண்டபுலவு, செட்டிகுளம், வீரபுரம் ஆகிய பகுதிகளிலேயே இந்த பெரு வெடிப்புச் சத்தமும் அதன் தொடர்ச்சியான அதிர்வுகளும் உணரப்பட்டுள்ளன. எனினும் இந்தச் செய்தி அச்சுக்குப்போகும் வரையில் அது நிலநடுக்கமா? என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. (ம-110)

## பாம்பு...

இவ்வாறு உயிரிழந்தவராவார். கடந்த 16 ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் மாட்டை அவிழ்க்கச் சென்றபோது, புற்றரைக்குள் இருந்த பாம்பு அவரைத் தீண்டியுள்ளது. இதையடுத்து அந்த நபர் உடனடியாக மயக்கமடைந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சையின்போது நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார். (அ-ம-26-100)

## இந்தியத்...

தூதரகம் வரை பேரணியாகச் சென்ற கடற்றொழிலாளர்கள், அதன் தொடர்ச்சியாகவே தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினார்கள்.
எதிர்ப்புப் போராட்டத்தின் இறுதியில் இந்திய அரசுக்கான கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றும் மீனவர்களால் யாழ். இந்திய துணைத்தூதரகத்தில் கையளிக்கப்பட்டது.
மீனவர்களின் போராட்டம் காரணமாக சுமார் இரண்டு மணி நேரம் யாழ்ப்பாணம் - மருதடி வீதி ஊடான போக்குவரத்தைப் பொலிஸார் தடை செய்திருந்ததுடன் துணைத் தூதரகத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (அ-ம-66-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கி மீதி வசதி
(SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 173 7684

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி யாழ்ப்பாணம்

A/L Day class

துரித மீட்டல் வகுப்பு
கலை, வர்த்தகம்
ஆரம்பமாகி நடைபெறுகின்றன

திங், செவ், புதன், வியா, வெள்ளி
ஐந்து நாட்களும் காலை 7.00 தொடக்கம் 11.00 மணிவரை

Note: எமது கிளை நிறுவனங்களான பொருளியற் கல்லூரி - சுன்னாகம் BARATHY - சித்தன்கேணி ஆகிய நிறுவனங்களிலும் நடைபெறுகின்றன.

# வாள்வெட்டுப் பின்னணியில் பொலிஸும் இராணுவமும்



## நாடாளுமன்றத்தில் சிறீதரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வாள் வெட்டு சம்பவங்களின் பின்னணியில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் மறைகரம் உள்ளது என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்ப்பாணம் மண்ணில் வாள்வெட்டு சம்பவங்கள் மலிந்து கிடக்கின்றன. இதற்குப் பின்னால் இராணுவத்தின் மறைகரம் இருக்கின்றது. பொலிஸாரின் ஒத்துழைப்பு இருக்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த அவர்கள் தயாரில்லை என்பதைத்தான் இப்படியான சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. இந்த நாட்டில் ஓர் இனம் தன்னுடைய இருப்பை பாதுகாத்துக்கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றது என்பதைத்தான் இது வெளிப்படையாகக் காட்டுகின்றது. இவ்வாறான அடாவடிகள் மாற்றுமொழி பேசுகின்ற இராணுவம், பொலிஸார் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. நாம் பொலிஸ் அதிகாரம் கோருவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்" - என்றார்.

(அ-ம-44)



சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரியில் யோகா தின நிகழ்வுக் கான முன்னாயத்த பயிற்சிகள், மேற்படி கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் மனோ தலைமையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

(ப-213)

ஆலய குருக்கள் தேவை


நவாலியில் பிரசித்தி பெற்ற ஆலயமொன்றுக்கு ஆலய வீட்டில் தங்கியிருந்து ஆலய நித்திய பூஜைகளை செய்வதற்கு பிராமண குருக்கள் தேவை. சம்பளம் மற்றும் மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

தலைவர் 077 690 6092
செயலாளர் 077 822 7381

(CS/774) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 03 . 1956



இறப்பு 18 . 06 . 2024

### வைத்திலிங்கம் கைலைநாதன்

**(ஓய்வுபெற்ற மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்),**
**(பிரபல சைக்கிள் ஓட்ட வீரர்)**

அளவெட்டி வடக்கு செட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கைலைநாதன் அவர்கள் நேற்று (18.06.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - இலட்சுமியார் தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், தேனுஜா (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), சிந்துஜா (கிராம சேவையாளர்), புவிவர்மன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தெவ்வீகன், முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணா, கேதீஷ்சா, அஸ்மிதன், நிவேதிதா ஆகியோரின் அன்பு பேரனும், பாலச்சந்திரன், பாலேந்திரன், கலாவதி (சுவிஸ்), லலிதா (லண்டன்), கமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராதாகிருஷ்ணன் (சுவிஸ்), அமிர்தரஞ்சினி (ஜேர்மனி), பாலகிருஷ்ணன் (கனடா), காலஞ்சென்ற பத்மலோஜினி, சறோஜினிதேவி, கிரிதரன் (லண்டன்), கிருபானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2024) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42681) A-1

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 . 12 . 1945



விண்ணில் 01 . 07 . 2023

அமரர் **இராசதுரை அருளானந்தம்**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

பத்தானை வீதி,
தாவடி தெற்கு.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS/ ) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org